காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 21 | வெள்ளிக்கிழமை 07.09.2018 | கதிர் 306

## இது ரகசியம் அல்ல!

தமிழர் அரசியலின் முழுக் கவனமும் இன்று கொழும்பு ஹல்ஸ்டோப் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பக்கம்தான் திரும்பியிருக்கும் என்று நம்பலாம். நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுத் தொடர்பில் நீதிமன்றின் முன்னால் பக்கம் 03

# புதிய அரசமைப்புக்கு நகல் வரைவு தயார்!

## வழிகாட்டல் குழு நேற்று இணக்கம்

கொழும்பு, செப்ரெம்பர் 07

புதிய அரசமைப்புக்கான நகல் வரைவுக்கு வழிகாட்டல் குழுவின் நேற்றைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

இது தொடர்பில் பத்து நிபுணர்களைக் கொண்ட குழு சமர்ப்பித்த யோசனைத் திட்டத்தை வழிகாட்டல் குழு நேற்று சர்ச்சையின்றி ஏற்றுக்கொண்டது. பக்கம் 03

## மன்னார் வைத்தியசாலையில் மருத்துவர் மீது நேற்றுத் தாக்கு!

### கண்டித்துப் பணிப்புறக்கணிப்பு

மன்னார், செப் .07

மன்னார் பொது வைத்தியசாலையின் பிரசவ விடுதியில் கடமையில் இருந்த வைத்தியர் ஒருவர் மீது நேற்றுக் காலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று ஒரு நாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பக்கம் 14

## மூன்று வீடுகளுக்குள் புகுந்து வாள்வெட்டு!

யாழ்ப்பாணம்,செப் 07

கல்வியங்காட்டுப் பகுதியில் 3 வீடுகளுக்குள் புகுந்து வாள்வெட்டுக் கும்பல் ஒன்று நடத்திய தாக்குதலில் தந்தை, தனயன் மற்றும் குடும்பப் பெண் என மூவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். பக்கம் 14

## ராஜீவ் கொலையாளிகளின் விடுதலை; முடிவு தமிழ்நாட்டு அரசின் கைகளில்!

### இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பு

புதுடில்லி,செப் .07

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஏழு பேரின் விடுதலை குறித்து, தமிழக அரசே முடிவெடுக்கலாம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பக்கம் 14

## காணாமற்போனோர் குறித்து முறையிட்ட பெண்களுக்குப் பாலியல் சித்திரவதைகள்

### காணாமற்போனோர் அலுவலகம் எடுத்துரைப்பு

கொழும்பு,செப்.07

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் முறைப்பாடுகளை வழங்கிய பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெண் உறுப்பினர்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கும் தாக்குதல் பக்கம் 14

## அரசியல் வரலாற்றில் வெற்றிகரமான பேரணி



கொழும்பு, செப்.07

கூட்டு எதிரணி நேற்று முன்தினம் நடத்திய பேரணியே, இலங்கை அரசியல் வரலாற்றில் மிகவும் வெற்றி பக்கம் 14

## நள்ளிரவுக்கு முன்னரேயே முடிந்தது சத்தியாக்கிரகம்

கொழும்பு, செப்.07

கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை கூட்டு எதிரணியினரால் முன்னெடுக்கப்பட்ட பேரணியைத் தொடர்ந்து லேக் ஹவுஸ் சுற்றுவட்டத்தில் நடத்தப் பக்கம் 14

## தலையில் வெட்டுத் தழும்புடன் மீட்கப்பட்டது மண்டையோடு!

### மன்னார் மனிதப் புதைகுழியில்



மன்னார்,செப்.07

மன்னார் சதொச வளாகத்தில் தொடர்ச்சியாகச் சந்தேகத்துக்கிடமான மனித எச்சங்கள் பக்கம் 14

## ராணுவத்திடமிருந்து மீண்ட மயிலிட்டி கலைமகள் வித்தி.



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,செப்.07

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் கடந்த 27 வருடங்களின் பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டது. பக்கம் 14

## மயிலிட்டி கலைமகள் வளாகத்திலும் புத்தர்



யாழ்ப்பாணம், செப்.07

இராணுவத்தின் பிடியில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்ட மயிலிட்டி கலைமகள் வித்தியாலய வளாகத்தில் புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ளது. பக்கம் 14

## விடுவிக்கப்படாத காணிகளில் பயிர்ச்செய்கையில் படையினர்

### நேரில் கண்டு கவலையடைந்தனர் மக்கள்



யாழ்ப்பாணம்,செப்.07

மயிலிட்டியில் மக்களின் காணிகளில் படையினரால் மேற்கொள்ளப்படும் விவசாயச் செய்கைகளைப் பார்த்துக் கவலை வெளியிட்ட பக்கம் 14

## ஆட்சி மாற்றத்தின் பின் 2,800 ஏக்கர் விடுவிப்பு

### பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.07

2015 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் வலிகாமம் வடக்கில் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து பக்கம் 14



காலைக்கதிர் Kalaikkathir


# நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டோம்!

## புதிய இளம்தலைமுறைகளிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்கிறார் பிரதமர்

நாட்டின் எதிர்கால பரம்பரையினருக்கு கடன்சுமையுடனான பொருளாதாரத்தைக் கையளிப்பதல்ல. கடனை செலுத்தக்கூடிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே இலக்காகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கு சமகால நல்லாட்சி அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், புதிய தலைமுறையினிடம் நாடு ஒப்படைக்கப்படல் வேண்டும் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுக் காலை நடைபெற்ற கட்சியின் 72 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய வைபவத்தில் பிரதமர் உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-



அமரர் டீஎஸ் சேனநாயக்க, அமரர் டட்லி சேனநாயக்க, ஜே.ஆர். ஜயவர்த்தன, கொத்தலாவல, டி.பி. விஜயதுங்க, பிரேமதாச போன்ற ஜனாதிபதிகள் இந்த கட்சிக்கு தலைமைத்துவம் வழங்கினர்.

கட்சிகள் எத்தனை இன்று நாடாளுமன்றத்தில் எஞ்சியுள்ளன. கட்சி அங்கத்தவர்களாவது பெரும் கௌரவமாகும். நாம் முன்னோக்கி பயணிப்போம் . நாம் 2015ஆம் ஆண்டில் அதிகாரத்தைக் கைப்பற்றினோம் தேசிய அரசு என்ற ரீதியில் மக்களின் அங்கீகாரத்துடன் நாம் தெரிவானோம்.

சுவசெரிய என்ற அம்புலன்ஸ் சேவையை ஆரம்பித்தோம். அரச ஊழியர்களின் சம்பளங்களை அதிகரித்தோம். சமையல் எரிவாயு உள்ளிட்ட எரிபொருள்கள் விலை குறைப்பு மற்றும் பெண்களுக்கு பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொடுத்தோம். அதேபோன்று நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தினோம் இவைஅனைத்தும் நாம் கஷ்டமான காலங்களில் நின்று மேற்கொண்ட பணியாகும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி காலப்பகுதியில் மேற்கொண்ட அபிவிருத்தி பணிகளை பட்டியலிட்டார்.

மேலும், ஜனாதிபதி தேர்தலை 2 வருடங்களுக்கு முன்னதாக நடத்துமாறு நாம் கோரவில்லை. ஆர்ப்பாட்டம் செய்ய முடியாதவர்களால் நாட்டை எவ்வாறு முன்னெடுக்கமுடியும்? என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அம்பாந்தோட்டை துறைமுகமும் விமானநிலையமும் அன்று பெயரளவிலேயே இருந்தது. நாம் இவற்றை பொருளாதார கேந்திரநிலையமாக இன்று மாற்றி அமைத்துள்ளோம். மத்தள விமான நிலையத்தையும் நாம் வெற்றி பெறச் செய்வோம். இந்த விடயங்களில் சிரமமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

2025ஆம் ஆண்டுக்கு பின்னரும் முன்னோக்கி பயணிப்போம். கட்சியை மறுசீரமைப்பு செய்து கட்சியை முன்னெடுப்போம். நாம் கிராமத்துக்கு செல்ல வேண்டும். எம்மை விட்டு ஒதுங்கியிருப்போருடன் கலந்துரையாடி அவர்களை எம்முடன் நெருக்கமாக்கி கொள்வோம். புதிய இளம் சமூகத்தினரிடம் நாட்டை கையளிப்போம் .கட்சிக்கான அடுத்த தலைவர் பரம்பரையை நாம் முன்னெடுத்துவருகின்றோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்போம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

# ஐ.தே.க. ஒரு குடும்பத்திற்கு உரித்தான கட்சி அல்ல

## அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்



கொழும்பு, செப்.07

ஐக்கிய தேசியக் கட்சி ஒரு குடும்பத்திற்கு உரித்தான கட்சி அல்ல. அந்த கட்சி ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயற்படும் ஒரு கட்சியாகும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற கட்சியின் 72 ஆவது வருட நிறைவு நிகழ்வில் அமைச்சர் உரையாற்றினார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

நாட்டில் ஜனநாயகத்தை முன்னெடுக்கும் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியே. 72 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். வரலாற்று முக்கியத்துவம் மிக்க இந்த கட்சிக்கு 7 பேர் தலைமை தாங்கியுள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சி வலுவுடன் எதிர்காலத்தைநோக்கி பயணிக்கின்றது. இது ஜனநாயகக்கட்சியாகும். இதுவே இக்கட்சி ஏனைய கட்சியிலும் பார்க்க வித்தியாசமாகும். 1994ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சிக்கு அரச தலைவர் ஒருவர் இருக்கவில்லை.

ஐக்கியதேசியக் கட்சி உள்ளூராட்சி மன்றதேர்தலில் பின்னடைவைக் கண்டது என்று சிலர் நினைக்கின்றனர். எம்மால் 10 ஆண்டுகளுக்கு அரசாங்கத்தை முன்னெடுக்க முடியும். வலுவுடன் இந்த பயணத்தை ஆரம்பிக்கவேண்டும்.

கூட்டு எதிர்க்கட்சியினர் தமது பிரச்சினைகளுக்கு தீர்வாக கொழும்பில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். கொழும்பை முடக்கப்போவதாக கூறினர். நேற்று பின்னடைவைக்கண்ட வேலைத்திட்டத்தையே நாம் கொழும்பில் கண்டோம்.

இந்த நாட்டின் எதிர்காலம் ஐக்கிய தேசியக் கட்சியே ஆகும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க)

(மற்றொரு செய்தி 11ஆம் பக்கத்தில்)

# அக்கராயன் வைத்தியசாலையில் நோயாளருக்கு உணவு இல்லை!

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு உணவு வழங்கப்படுவதில்லை என நோயாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வளவு நாளும் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வந்தது. ஆனால், கடந்த சில தினங்களாக அவை நிறுத்தப்பட்டுவிட்டது எனக் கவலை தெரிவிக்கும் நோயாளர்கள், அக்கராயன் பிரதேசம் கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட பல கிராமங்களைக் கொண்ட பிரதேசம் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்

இது தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் குமாரவேல் கருத்துத் தெரிவிக்கையில்-

அக்கராயன் மருத்துவமனை விடுதிகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் உணவு கோரும் நோயாளர்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்படுகின்றனர்.

அந்த வைத்தியசாலையில் இதுவரை காலமும் சிற்றூழியர்களே உணவு சமைத்துவந்தனர் கடந்த சில தினங்களாக அவர்கள் சமைப்பதனை நிறுத்தி விட்டனர் இதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (க-70)

# கிளிநொச்சியின் குழாய் வழி குடிதண்ணீர் உகந்ததல்ல!

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஊடாக வழங்கப்பட்டுவருகின்ற குடிதண்ணீர் குடிப்பதற்கு உகந்த சுத்தமான நீர் அல்ல எனவும், ஒரு வித நிறத்துடன் காணப்படுகிறது என்றும் பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குழாய் வழி ஊடாக தங்களது வீடுகளுக்கு விநியோகிக்கப்படுகின்ற நீரைபோத்தல்களில்பெற்று அதனை கிணற்றில் இருந்து பெறப்படுகின்ற நீருடன் ஒப்பிடும் போது வேறுபாடு அப்பட்டமாக தெரிகிறது. இது குடிப்பதற்கு உகந்த நீர் அல்ல எனவும் பொது மக்கள் தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகருக்கும் நகரை அண்டிய பகுதிகளுக்குமான குடிதண்ணீர் விநியோகமானது இரணைமடுகுளத்திலிருந்து இடது கரை நீர்பாசன வாய்க்கால் ஊடாக கிளிநொச்சி குளத்திற்கு நீர் பெறப்பட்டு பின்னர் கிளிநொச்சி குளத்திற்கு அருகில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு டிப்போ சந்திக்கருகில் உள்ள நீர்த்தாங்கிக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பொது மக்களின் பாவனைக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இரணைமடுகுளத்து நீர் ஒரு வித பச்சை நிறத்தில் காணப்படுகிறது. எனவே குழாய் வழி மூலம் விநியோகிக்கப்படுகின்ற நீரும் குளத்து நீரை விட குறைவான பச்சை நிறத்தில் காணப்படுகிறது என்றும் பொது மக்கள் குறிப்பிடுகின்றனர். (க-70)

# நாமலின் முதல் போராட்டமே தோல்வி என்கிறார் நளின்!

கொழும்பு, செப்.07

மக்கள் கூட்டத்தை கூட்டி அவர்களுக்கு மதுபானம் வழங்கி கலவரத்தை ஏற்படுத்தி ஆட்சியை கவிழ்க்கலாம் என எதிர்பார்த்தார்கள். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை என சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஊடகதகவல் மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-



மக்களுக்கு மதுபானங்களை வழங்கி வன்முறைகளைத் தூண்டி கொழும்பில் கலவரத்தை ஏற்படுத்த சதி செய்தனர். ஆனால் சாத்தியப்படவில்லை. பாதுகாப்பு படையினர், கலகம் அடக்கும் பொலிஸார், நீர்த்தாரை வாகனங்கள் என அனைத்தும் ஆயத்தமாக இருந்தபோதும் பயன்படுத்த வேண்டிய தேவை இருக்கவில்லை.

காரணம் மது பானத்தை குடித்து விட்டு வீதியில் மயங்கி கிடந்தார்கள்.

நாடாளுமன்றம், அலரி மாளிகை மற்றும் நீதிமன்றத்தை சுற்றிவளைக்க சதி செய்தனர். 10 லட்சம் பேர் பேரணியில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்த்தார்கள். இறுதியில் 4 ஆயிரம் பேரே கலந்துகொண்டனர். இதனால் இவர்கள் நினைத்தவைகளில் ஒன்றும் பலிக்கவில்லை.

நாமல் ராஜபக்ஷ ஏற்பாடு செய்த முதல் போராட்டமே தோல்வியில் முடிவடைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# பல்கலை மாணவியின் நூல்களுக்கு தீயிட்டு அட்டூழியம் செய்த கும்பல்

## குப்பிளானில் அடாவடிச் சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.07

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குப்பிளான் வடக்கில் வீடு புகுந்த வன்முறைக் கும்பல் ஒன்று, வீட்டிலுள்ளவர்களை அச்சுறுத்தியதுடன், பல்கலைக்கழக மாணவியின் பாடநூல்களை தீயிட்டு எரித்து அடாவடியிலும் ஈடுபட்டுள்ளது.

அத்துடன், வீட்டிலிருந்த பணம் மற்றும் தங்கச் சங்கிலியையும் அந்தக் கும்பல் அபகரித்துக் கொண்டு தப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

இலக்கத் தகடுகளற்ற 4 மோட்டார் சைக்கிள்களில் முகமூடி அணிந்து வந்த 8 பேர் கொண்ட கும்பலே இந்த வன்முறையில் ஈடுப்பட்டது. அவர்களிடம் வாள்கள், கைக்கோடரிகள் இருந்தன. வீட்டில் இருந்தவர்களை அவர்கள் அச்சுறுத்தினர். யன்னல்கண்ணாடிகளை உடைத்தனர்.

பல்கலைக்கழக மாணவியின் பாடநூல்கள் உள்ளிட்ட கற்றல் உபகரணங்களையும் மெத்தையையும் தீ வைத்து எரித்தனர். வீட்டின் முன் நின்ற இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் அடித்து உடைத்தனர்.

வீட்டின் அலுமாரியிலிருந்த 2 லட்சம் ரூபா பணம் மற்றும் ஒரு பவுண் சங்கிலி என்பவற்றைக் கொள்ளை அடித்து அவர்கள் தப்பி சென்றனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஆரம்ப விசாரணைகளின் அடிப்படையில் இந்த வீட்டுகாரர்களுக்கும் அதே இடத்தைச் சேர்ந்த சிலருக்கும் இடையே காணிப் பிரச்சினை ஒன்று உள்ளது, அதன் பின்னணியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கருதப்படுகின்றது.

இந்தக் குற்றச் செயலுக்கும் ஆவாகுழுவுக்கும் தொடர்பில்லை. கூலிக் கும்பல் ஒன்றே இதனைச் செய்துள்ளது என்று பொலிஸார் கூறினர். (ஐ-7)

# தென்னிலங்கை வைத்தியர்கள் மன்னாரில் பணியாற்ற அச்சம்

## மாகாண சுகாதார அமைச்சர் கூறுகிறார்

மன்னார், செப்.07

வைத்தியர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் காரணமாகத் தென் மாகாணம் உள்ளிட்ட பிற மாகாணங்களின் வைத்தியர்கள் இங்கு வருவதற்கு அஞ்சுகின்றனர் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையின் பிரசவ விடுதியில் கடமையில் இருந்த வைத்திய அதிகாரியும், பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டனர்.

இது தொடர்பாக மன்னார் பொது வைத்தியசாலை வைத்தியர்களுடன் கலந்துரையாடிய மாகாண சுகாதார அமைச்சர், அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

காரணம் எதுவாக இருப்பினும் கடமையிலுள்ள வைத்தியர் அல்லது பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்துவது என்பது கண்டிக்கப்பட வேண்டிய விடயம். இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும்.

நோயாளர்களைப் பார்வையிட வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுவதும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு காரணமாக உள்ளது. எனவே, பார்வையாளர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு பொலிஸ் பாதுகாப்பையும், பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களையும் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வைத்தியசாலை யில் பொலிஸ் பாதுகாப்பை அதிகரிப்பது வைத்தியசாலையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும்.-என்றார். (ஐ)

# சிறை கூரை மீது ஏறி கைதி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, செப் .07

மட்டக்களப்புச் சிறைச்சாலைக் கூரை மீது ஏறி கைதி ஒருவர் தன்னை விடுதலை செய்யக் கோரி நேற்று மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

திருகோணலையைச் சேர்ந்த 21 வயதுடைய யோகராசா லஷான் என்ற கைதி வாகரைப் பிரதேசத்தில் 15 வயது சிறுமியைப் பலாத்தகாரம் செய்தமை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு 6 மாத காலச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டு மட்டக்களப்புச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவர் தன்னைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என கோரி நேற்று மாலை 4 மணியளவில் சிறைச்சாலை கூரை மீது ஏறி தன்னைத் தானே காயப்படுத்திக் கொண்டு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டார்.

இதனையடுத்து அவரை கூரையிலிருந்து பாதுகாப்பாக இறக்குவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். (ஐ)

# மன்னிப்புக் கோரினார் நாமல்

கொழும்பு, செப்.07

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட அரச எதிர்ப்புப் பேரணியால், மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருப்பின், அதற்காகத்தான் மன்னிப்புக் கோருகிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்துள்ளனர் என்பதை, அரசுக்கு எடுத்துக்காட்ட முடிந்ததாக அவர் மேலும் கூறினார். (ஐ)

# பதில் பிரதம நீதியரசராக சிசிர டி ஆப்ரூ நியமனம்

கொழும்பு, செப்.07

பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதவான் கே.சிசிர டி ஆப்ரூ நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றப் பதில் தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் காமினி ரோஹன அமரசேகர ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்னவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழு நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றக் கட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியது. அனேகமாக அனைத்துத் தரப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அரசமைப்புக்கு நகல் வரைவாக பத்து நிபுணர்களின் குழு முன்வைத்த யோசனை வடிவம் நேற்றைய கூட்டத்தில் சமர்ப்பிக்கப் பட்டது.

ஆங்கிலத்தில் அமைந்த அந்த யோசனைத் திட்டத்தில் முன்னர் வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையில் கூறப்பட்ட அம்சங்களே பிரதானமாக இடம் பெற்றிருக்கின்றன. அவை தொடர்பில் பல்வேறு கட்சிகளினாலும் முன்வைக்கப்பட்ட மாற்று யோசனைகள் தனியான ஒரு பின்னிணைப்பாகவும், நிபுணர் குழு பரிந்துரைத்த பல்வேறு விடயங்கள் இன்னொரு பின்னிணைப்பாகவும் சேர்க்கப்பட்டிருந்தன.

இந்த யோசனைத் திட்டத்தின் சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்புகள் ஒரு வாரத்தில் கிடைக்கும் எனக் கூறப்பட்டது.

அந்த மொழிபெயர்ப்புகளுடன், இம்மாதம் மூன்றாம் வாரத்தில் நாடாளுமன்றம் கூடும் சமயத்தில் வழிகாட்டல் குழுவை மீண்டும் கூட்டி ஆராய்வது என்றும் -

இந்த நிபுணர் குழுவின் யோசனைத் திட்டத்தை புதிய அரசமைப்புக்கான நகல் வடிவத்தின் முன் வரைவாகக் கருதி அதனை அரசமைப்புப் பேரவையாகக் கூடும் நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிப்பது என்றும் -

அரசமைப்புப் பேரவை அதனை நகல் வடிவாக ஏற்றுக் கொண்டால் அதனடிப்படையில் விவாதங்களைத் தொடர்வது என்றும் -

நேற்றைய கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டதாகத் தெரிகின்றது.

கூட்டு எதிரணி உட்பட சகல தரப்பினரும் சேர்ந்து இந்த இணக்கப்பாட்டுக்கு வந்தமை முக்கிய திருப்பம் என்று கருதப்படுகின்றது.

## ஆட்சி...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாண்டுகளில் 2,800 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் இந்த வருடத்தில் மட்டும் 872 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டுள்ளது.

இன்னமும் ஆறு பாடசாலைகள் விடுவிக்கப்படாமல் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருக்கின்றன. குறிப்பாக மயிலிட்டி ஆர்.சி.,வயாவிளான் சிறிவேலுப்பிள்ளை வித்தியாசாலை, பலாலி சித்திவிநாயகர், பலாலி அமெரிக்கன் மிசன், காங்கேசன்துறை ஆர்.சி., காங்கேசன்துறை மகாவித்தியாலம் போன்ற பாடசாலைகளே விடுவிக்கப்படாமல் உள்ளன.

இதேபோன்று வலிகாமம் வடக்குபிரதேசசபையின்தலைமை அலுவலகமும், சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானங்கள் உட்பட பல இடங்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

ஆகவே அந்தக் காணிகளும் பாடசாலைகளும் விரைவில் விடுவிக்கப்படவேண்டும். அதனூடாக வலி.வடக்கின் மீள்குடியேற்றம் துரிதமாக நடக்க வேண்டும் - என்றார். (ஐ-7)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாக முன்னிலையாகி விளக்கம் தருமாறு கோரப்பட்டுள்ள வடக்கின் முதலமைச்சரும், முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமான சி.வீ.விக்னேஸ்வரன், மாகாண அமைச்சர்கள் அனந்தி சசிதரன், சிவநேசன் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில் பிரசன்னமாவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று அவர்களுக்கு எதிராக அதிரடி உத்தரவு எத்தனையும் விடுக்கும் சாத்தியம் இல்லை என்றே சட்ட வட்டாரங்கள் ஊகிக்கின்றன.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக உங்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்ற சாரப்பட நீதிமன்றம் வினாவெழுப்பி, அதற்கான பதிலை வழங்குவதற்குக் கால அவகாசம் தந்து, வழக்கை நீதிமன்றம் நீண்ட திகதிக்குத் தள்ளிப் போடக் கூடும். அல்லது நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்கு கால நிர்ணயம் விதித்து உத்தரவு எதனையும் நீதிமன்றம் வழங்கக் கூடும்.

எது, எப்படியென்றாலும் முதல்வர் விக்னேஸ்வரனின் மாகாண நிர்வாகத்தைப் பொறுத்தவரை இந்த வழக்கு காலைச் சுற்றிய பாம்புதான். இது கடிக்காமல் விடாது. அதைக் கவனமாகக் கையாள்வது நீதித்துறையில் கரை தோய்ந்தவரான நீதியரசர் விக்னேஸ்வரனினதும், அவரது சட்டத்தரணியாக நீதிமன்றில் பிரசன்னமாகும், சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரனினதும் கைகளில்தான் தங்கியுள்ளது.

★ ★ ★

நாளை காலை நல்லூர் முருகன் தேரில் ஆரோகணித்து இருப்பிடத்துக்கு வந்து சேர, அதே நேரம் - காலை 10 மணியளவில் - ரெலோவின் தலைமைக் குழு வவுனியாவில் கூடுகின்றது.

தற்போதைய நாடாளுமன்றின் பதவிக் காலத்தில் முற்பாதி போக, பிற்பாதியில் ரெலோவுக்கு வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இதுவரை தமிழரசுக் கடசித் தரப்பு வழங்காமை, ரெலோவின் தலைமையின் தகுதி நிலையைச் சீண்டும் வகையில் கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரன் வெளியிட்டவை எனக் கூறப்படும் கருத்து, வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக புளொட் தலைவர் த.சித்தார்த்தன் ஓரிரு தினங்களுக்கு முன்னர் வெளியிட்டமை போன்ற கருத்துக்களை ரெலோ தலைமையும் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை போன்ற விடயங்கள் இந்தக் கூட்டத்தில் எதிரொலிக்கும் எனத் தெரிகின்றது.

சிரேஷ்ட சட்டத்தரணிகளான ரெலோ செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தாவுக்கும், கூட்டமைப்புப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான 'கெமிஸ்ட்ரி' இப்போது மிகவும் நன்றாக வேலை செய்கின்றது என்றே எனக்குத் தோன்றுகின்றது.

அதேசமயம், ரெலோவின் சிவாஜிலிங்கம், விந்தன் போன்றோர் முதலமைச்சர் விசிறிகளாக உள்ளனர்.

முதல்வர் விக்கி - சுமந்திரன் மோதலின் எதிரொலி இந்தத் தரப்புகளினால் நாளை ரெலோ மத்திய குழுவிலும் ஓங்கி பிரதிபலிக்கப்படும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

★ ★ ★

சம்பந்தன், நிமால் சிறிபால டி சில்வா, ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், மனோ கணேசன் உட்பட்ட சர்வ கட்சித் தலைவர்கள் குழு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் அடுத்த வெள்ளிக்கிழமை வரை புதுடில்லியில் சுற்றுலாவை முன்னெடுக்கும் சமயத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் புதுடில்லியில் இருக்கின்றார் என்பது தெரிந்ததே.

இலங்கையின் சர்வ கட்சி நாடாளுமன்றக் குழுவினர் தமது புதுடில்லி விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கின்றார்கள் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம், மஹிந்த ராஜபக்ஷ - நரேந்திர மோடி சந்திப்புக்கான ஏற்பாடு, மஹிந்த ராஜபக்ஷவைத் தனது விருந்தினராகப் புதுடில்லிக்கு அழைத்திருக்கும் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் மக்களவை உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமியினால் செய்யப்பட்டுவருகின்றது எனவும் அறிய வந்தது.

இந்தச் சந்திப்புகள் மூலம் புதுடில்லி காத்திரமான செய்தி ஒன்றை இலங்கை அரசியல் தரப்புகளுக்குச் சொல்ல விழைகின்றது எனப் புதுடில்லியையும் சென்னையையும் தளமாகக் கொண்டு இயங்கும் அரசியல் விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டார்.

எது நடந்தாலும் ஆக்கபூர்வமானதாக நடந்தால் நல்லது தானே...! -மின்னல்-

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இணக்க அரசியலின் முன்னேற்றம்

புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழு பகீரதப் பிரயத்தனத்துக்குப் பின்னர் மலையைக் கெல்லி வெற்றிகரமாக எலியைப் பிடித்து விட்டது என்று கூறும் நிலைக்கு வந்துவிட்டது.

வழிகாட்டல் குழுவின் வழிகாட்டலில் இயங்கி வந்த பத்து நிபுணர்களைக் கொண்ட அறிஞர் குழு பரிந்துரைத்த புதிய அரசமைப்பு வழவத்துக்கான திட்டத்தை ஒரு வரைவாக – நகலாக – ஏற்றுக் கொண்டு, அதனை அரசமைப்புப் பேரவையாகக் கூடும் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

எண்பதுக்கு மேற்பட்ட தடவைகள் கூடி, பல மணி நேரம் ஆராய்ந்து, மரதன் அமர்வுகளை நடத்திய வழிகாட்டல் குழு, கடைசியாக – வெற்றிகரமாக – ஒரு நகல் வழவுக்கான வரைவை எட்டியிருக்கிறது.

நிபுணர் குழு இப்போது ஆங்கில வடிவத்தில் தயாரித்திருக்கும் இந்த மாதிரி வடிவத்தின் தமிழ், சிங்கள மொழி பெயர்ப்பு இன்னும் ஒரு வாரத்தில் கிடைக்கும் என்றும், இந்த மாதம் மூன்றாம் வாரத்தில் நாடாளுமன்றம் மீண்டும் கூடும் சமயத்தில் வழிகாட்டல் குழு திரும்பவும் ஒரு தடவை கூடி தமிழ், சிங்கள வடிவங்களைப் பரிசீலித்து அங்கீகரிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

அதன் பின்னர் இந்த மாதிரி வடிவத்தை ஆராய்வதற்காக நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்தக் கூட்டத்தில் இந்த மாதிரி வடிவத்தை விவாதிக்கும் அரசமைப்புப் பேரவை, அதனைப் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவமாக ஏற்றுக்கொண்டு, அதன் அடிப்படையில் விவாதங்களைத் தொடர்வதா என்று தீர்மானிக்கும் எனவும் கூறப்பட்டது.

அடுத்த நவம்பரில், அடுத்த ஆண்டுக்கான வரவு– செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விடும். அதைத் தொடர்ந்து நவம்பர் மாதம் முழுவதிலும், பின்னர் டிசெம்பர் ஆரம்பத்திலும் வரவு – செலவுத் திட்டம் தொடர்பான குழு நிலை விவாதங்களும், இரண்டாம், மூன்றாம் வாசிப்புக்கள் மீதான வாக்கெடுப்பும் என்று நாடாளுமன்ற நடவடிக்கைகள் மிகத் தீவிரமடைந்துவிடும்.

எனவே, அதற்கு முன்னர், பெரும்பாலும் அடுத்த மாதத்தில் – ஒக்ரோபரில் – மேற்படி புதிய அரசமைப்புக்கான யோசனைத் திட்ட வடிவத்தை நகல் யாப்பாக ஏற்று அங்கீகரிக்கலாமா என்று ஆராய்வதற்காக நாடாளுமன்றம் அரசமைப்புப் பேரவையாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சரியோ, பிழையோ – நல்லாட்சி அரசின் கீழ் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுகின்றதோ இல்லையோ – புதிய அரசமைப்புக்கான யோசனைத் திட்டமாக ஒரு நகல் வடிவம் வெளிவருவது, இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள தரப்புகளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க – கணிசமான – வெற்றி என்றே கூற வேண்டும்.

'ஏக்கிய இராஜ்ஜிய' , 'ஒருமித்த நாடு' – என்ற ஆட்சி முறைமை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கணிசமாகக் குறைத்தல், மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்குதல் என்ற சில பண்பியல்புகளை இந்த நகல் வடிவம் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

'ஒற்றையாட்சி முறைமை' என்பது இல்லாமல் போதல் வரவேற்கத்தக்கது என்றாலும், தமிழர்கள் எதிர்பார்க்கும் 'சமஷ்டி ஆட்சி முறைமை' என்ற சொல் அதற்குள் இல்லாமையைப் பெருங்குறைபாடாகப் பல தமிழர் தரப்புகள் சீற்றத்துடன் – துள்ளிக் குதித்து – சுட்டிக் காட்டும் என்பது திண்ணம்.

மாகாணங்களுக்கு பரவலாக்கப்படும் அதிகாரங்கள் மீளவும் மத்திய அரசினால் பறிக்கப்படாமலும், மத்திய அரசு நேரடியாக அந்த அதிகாரங்களைத் தானே பிரயோகித்துக் கொள்ளாமலும் இருப்பதை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகள் இந்த நகல் வடிவத்தில் எவ்வாறு செய்யப்பட்டுள்ளன என்பது இனித்தான் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

எது, எவ்வாறாயினும், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் இருந்து விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி மட்டுமே வெளியேறியிருக்கின்றது. ஏனைய தரப்புகள் – கூட்டு எதிரணி உட்பட – அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து வழிகாட்டல் குழு மூலம் இத்தகைய புதிய அரசமைப்பின் நகல் வடிவத்துக்கு முன் மாதிரியான யோசனைத் திட்டம் ஒன்றை முன்வைப்பதற்கு இணங்கியிருக்கின்றமை, புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் முக்கிய மைக் கல்லே. நல்லாட்சி அரசின் இணக்க அரசியலில் இது ஓரடி முன்னோக்கிய நகர்வுதான்.

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் விடுதலைக்கு வாய்ப்பாக உத்தரவு

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகள் ஏழு பேர் கடந்த 27 ஆண்டு கால சிறைவாசம் அனுபவிக்கையில் அவர்களை விடுவிக்கும் போக்கில் தமிழக அரசு செயற்பட்ட போதிலும், இந்திய மத்திய அரசு அதற்கு முட்டுக்கட்டை போட்டு வந்தது

ஆனால், அந்தக் கைதிகள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கு உண்டு என்ற சாரப்பட இந்திய உச்ச நீதிமன்றம் இப்போது தீர்ப்பளித்துள்ளது. அந்தத் தீர்ப்பின் பின்புலத்தில் பழைய விடயங்களை விவரிக்கின்றது இக் கட்டுரை



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த 1991ஆம் ஆண்டு மே 21ஆம் திகதி சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கில் முருகன், சாந்தன், பேறறிவாளன், நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன்,



முருகன் ▲ சாந்தன் ▲ பேரறிவாளன்



நளினி ▲ ரவிச்சந்திரன் ▲ ராபர்ட் பயஸ் ▲ ஜெயகுமார்

ஜெயக்குமார் ஆகிய 7 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டது. முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 3 பேருக்கு தூக்கு தண்டனையும், நளினி உள்ளிட்ட மற்ற 4 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது.

தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 3 பேரும் ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பினார்கள். இந்த கருணை மனுக்கள் மீது முடிவு எடுக்க காலதாமதம் ஏற்பட்டதாககூறி, அவர்களுக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து 2014ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் இந்த 3 பேரையும் விடுதலை செய்வது குறித்து அரசு உரிய முடிவு எடுக்கலாம் என்றும் கூறியது.

இதைத்தொடர்ந்து முருகன், சாந்தன், பேரறிவாளன் மட்டுமின்றி இந்த வழக்கில் ஏற்கனவே ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோரையும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்போவதாக தமிழக அரசு அறிவித்தது.

தமிழக அரசின் இந்த முடிவை எதிர்த்து அப்போது மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கூட்டணி அரசு, உச்ச நீதிமன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்தது. அந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்றம் , 7 பேரையும் விடுதலை செய்ய இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. அதன் பிறகு இந்த வழக்கை விசாரிக்க அமைக்கப்பட்ட அரசியல் சாசன அமர்வு பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு மறுஆய்வு மனு ஒன்றை தாக்கல் செய்தது.

இதற்கிடையே, தாங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் உள்ளதால் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரும் தமிழக அரசுக்கு கோரிக்கை மனு அளித்தனர். மேலும், தன்னை விடுவிக்கும் படி தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் நளினி ஒரு மனு தாக்கல் செய் தார்.

இதனையடுத்து, அவர்களது கோரிக்கையை பரிசீலித்த தமிழக அரசு, அவர்கள் அனைவரும் 24 ஆண்டுகளாக சிறையில் உள்ள காரணத்தால், அவர்களை விடுதலை செய்ய முடிவு செய்து, அதற்கு மத்திய அரசின் ஒப்புதல் கோரி கடந்த 2016 ஆம் ஆண்டு 2 கடிதங்கள் எழுதியது. ஆனால் அதற்கு மத்திய அரசு பதில் தரவில்லை.

இதற்கிடையே, தமிழக அரசு ஏற்கனவே தாக்கல் செய்திருந்த மறுஆய்வு மனு மீதான விசாரணையில், 7 குற்றவாளிகளையும் விடுவிப்பது குறித்து மத்திய அரசின் கருத்தை 3 மாதங்களுக்குள் தெரிவிக்க வேண்டும் என்று கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதைத்தொடர்ந்து, தற்போது சிறையில் உள்ள கைதிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேரின் உடல் ஆரோக்கியநிலை, மனநிலை, பொருளாதார பின்னணி, சமூக பின்னணி, குடும்பச் சூழல், அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை விவரம் மற்றும் வழக்கு தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைக்குமாறு மத்திய உள்துறை அமைச்சகம் தமிழக அரசுக்கு கடிதம் அனுப்பியது.

மத்திய அரசின் அந்த கடிதத்துக்கு தமிழக அரசு உரிய பதிலை அனுப்பி வைத்ததாக கூறப்படுகிறது.

ராஜீவ்காந்தி கொலை கைதிகள் பற்றி மத்திய அரசு கேட்டுள்ள விவரங்கள் மற்றும் ஆவணங்களை தமிழக அரசு அனுப்பி வைத்தது. இந்த நிலையில் மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த ஏப்ரல் 18ஆம் தேதி கடிதம் எழுதி உள்ளது. அதில் ராஜீவ் கொலை குற்றவாளிகள் 7 பேரை விடுதலை செய்ய கூடாது எனக் கூறி உள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், முருகன், சாந்தன், நளினி உட்பட 7 பேர் கடந்த 27 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனை கைதிகளாக உள்ளனர். கருணை அடிப்படையில் இவர்களை விடுவிக்க வேண்டும் என தமிழக அரசு, மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு கடந்த நான்கு ஆண்டுகளில் இரண்டு முறை கடிதம் எழுதியிருந்தது. ஆனால், இரண்டு கடிதங்களும் நிராகரிக்கப்பட்டன.

இந்த நிலையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரின் விடுதலையை மத்திய அரசு மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என தமிழக அரசு கோரிக்கை வைத்தது.

உச்ச நீதிமன்றத்தில் இவர்களை விடுவிக்க மறுப்பு தெரிவித்து மத்திய அரசு தாக்கல் செய்த கூடுதல் ஆவணத்தை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இந்த நிலையில் இந்த வழக்கு நீதிபதி ரஞ்சன் கோகாய் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகள் 7 பேரை முன்கூட்டியே விடுதலை செய்வது குறித்து தமிழக அரசு முடிவெடுக்க முழு அதிகாரம் உள்ளது; இது சம்பந்தமாக தமிழக அரசு தமிழக ஆளுநருக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என உத்தரவிட்டது.

## நாளை

08.09.2018
சனிக்கிழமை
நட்சத்திரம்: ஆயில்யம் மு.ப. 10.5 வரை
திதி: சதுர்த்தசி பி.இ.2.13 வரை
சுபநேரம்: 3.04 – 4.34 வரை
இராகுகாலம்: 9.04 – 10.34 வரை

# கிளிநொச்சியில் புதிய வீடுகளுக்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நடுகை!





செவட்ட செவன நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் புதிய வீடுளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

கரைச்சி, பச்சிலைப்பள்ளி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இந் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 82வீடுகளுக்கும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 59 வீடுகளுக்கும், கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 12 வீடுகளுக்கும ான அடிக்கல் நடும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த வீடுகளுக்கான அடிக்கல்லினை நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் நட்டு வைத்துள்ளார்.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் முறிப்பு பகுதியில் 12 வீடுகளை அமைக்கும் திட்டத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம், கரைச்சி பிரதேச செயல்ாளர் த.முகுந்தன், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் உரையாற்றுகையில்–

வீடமைப்பு திட்டத்தின் கீழ் 5000 இற்கும் மேற்பட்ட வீடுகள் அமைத்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் கடந்த கால அரசு என்ன செய்தது.

வெறுமனே வீதியை போட்டார்கள், ரயிலை வரச்செய்தார்கள், யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் ஒன்றை

அமைத்தார்கள். அது இப்போது பயன்பாடு இல்லாது உள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதையும் அவர்க்ள் செய்யவில்லை.

கடந்த அரசு அபிவிருத்தி என்ற போர்வையில் போ தைப்பொருளையும் நன்கு அபிவிருத்தி செய்துள்ளது. யுத்தம் என்ற போர்வையில் விடுதலைப் புலிகளை அழிப்பதாக கூறி அப்பாவி மக்களை இன அழிப்பு செய்தனர்.

விடுதலை புலிகளை இனங்கண்டு அழிக்காது அப்பாவி மக்களை இலக்கு வைத்து தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஏதோவொரு உயிரிழப்போ அல்லது அங்கவீனராக்கப்பட்டோ அல்லது உடல் முழுவதும் ஷெல், துப்பாக்கிச் சன்னங்கள் கொண்டோ வாழும் குடும்பங்களே உள்ளன.

இவ்வாறானவர்களுக்கு சஜித் பிரேமதாஸ தமது அமைச்சின் ஊடாக பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார் என்றார்.

நிகழ்வில் அரச அதிபர் உரையாற்றுகையில்–

பதின் மூவாயிரம் வீடுகள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு தேவையான நிலையில் இவ்வாறு கட்டப்படும் வீடுகளினால் ஓரளவு மக்களின் வீட்டு பிரச்சினைகள் படிப்படியாக குறையும்.

அமைச்சர் சஜித் கிளிநொச்சிக்கு வருகைதந்தபோது 50 புதிய கிராமங்களை உருவாக்கும் திட்டத்தை மேற்கொள்ளுமாறு பணித்தார். அந்தவகையில் தொடர்ச்சியாக திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கு செல்லும் ஜனாதிபதி, பிரதமர் என்னை இழிவுபடுத்தி பேசுகின்றனர்

## மஹிந்த குற்றச்சாட்டு



வடபகுதிக்கு செல்லும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தன்னை இழிவுபடுத்தி வருகின்றனர் என முன்னாள் ஜனாதிப்தி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சத்தியாக் கிரக போராட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

எனது ஆட்சிக் காலத்தில் நான் ஈட்டிய வெற்றியின் காரணமாகவே இன்று பிரதமரும், ஜனாதிபதியும் வடக்குக்குச் சென்று என்னை இழிவுபடுத்துகின்றனர். வடக்கிற்கு சென்று என்னை கேவலப்படுத்துவதற்கான சூழ்நிலையை நானே உருவாக்கிக் கொடுத்துள்ளேன்.

விடுதலைப் புலிகளை தோற்கடித்து பெற்றுக் கொடுத்த சுதந்திரத்தை அரசு மீறிச் செயற்படுகிறது. தேர்தல்களை ஒத்தி வைப்பதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் முடக்கப்பட்டுள்ளன.

நாடு ஜனநாயக ஆட்சியிலிருந்து எதேச்சாதிகாரம் நோக்கி நகர்கின்றது. எனவே புதிய அரசொன்றை உருவாக்கி ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டியது நமது கடமையாகும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

# மின்தடை

யாழ்ப்பாணம், செப்.07

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை–

**மன்னார் பிரதேசத்தில்–**

பறயனாலங்குளம் ஒருபகுதி பெரியகுஞ்சுக்குளம், மாதக்கிராமம், பெரியமுறிப்பு, தேக்கம் மடுசந்தி, கட்டையடம்பன், மாலவராயர் கட்டையடம்பன், தம்பானிக்குளம், பன்னிவெட்டுவான், தொழில்நுட்பக்கல்லூரி பன்னிவெட்டுவான், இசைமலைத்தாழ்வு கற்கடந்த குளம், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன், முருங்கன்விதைபண்ணை, தேக்கம் நானாட்டான் பிரதேசசபை, மடுச்சந்தியிலிருந்து புமலர்ந்தான் வரை, மடுமாதா ஆலயப்பிரதேசம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின் விநியோகித்தர் அறிவித்துள்ளார்.

# இலங்கை வரலாற்றில் முதன்முறையாக கொழும்பில் திரண்ட மக்கள் கூட்டம்

## டளஸ் அழகப்பெரும தெரிவிப்பு



இலங்கை வரலாற்றில் ஆர்ப்பாட்டமொன்றுக்காக கொழும்பில் ஒன்று கூடிய பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கூட்டமே 'ஜன பலய' மக்கள் வெள்ளம் என கூட்டு எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் மாபெரும் பேரணி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

கொழும்புக்கு வெளியில் செல்வதாயின் பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் எமது அனுமதி தேவை.

இந்த நல்லாட்சி அரசை அதிகாரத்திலிருந்து விரட்டியடிப்பதற்கு வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் ஒன்று திரண்டனர்.

அரசி ன் எதிர்பாராத தடைகளையும் மீறி கொழும்புக்கு இந்த மக்கள் திரண்டது வந்தமை அரசாங்கத்துக்கு தனது எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கேயாகும்.

மக்கள் அடிப்படைத் தேவையை விளங்கிக் கொண்டு அரசு உடன் வீட்டுக்குச் செல்ல தயாராக வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பு வாழ் மக்கள் அச்சம் இன்றி அலுவலகம் பாடசாலை செல்லலாம்

## நேற்று அரசு விடுத்த அறிவிப்பு

கொழும்பு வாழ் மக்களுக்கு அரசு விசேட அறிவித்தல் ஒன்றை நெற்றையதினம் விடுத்தது.

எந்தவித அச்சமோ, பயமோ இல்லாமல் அலுவலகம் மற்றும் பாடசாலைகளுக்கு செல்லுமாறு அதிரல் அறிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு நகரம் முழுமையான பாதுகாப்புக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. இதன் காரணமாக அச்சமின்றி நாளாந்த கடமைகளை முன்னெடுக்குமாறு பொதுமக்களுக்கு அரசு அறிவித்துள்ளது.

நேற்றைய தினமும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட் டன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு நகரத்தின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு நேற்று முன்தினமும் நேற்றும் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டனர் என பிரதி அமைச்சர் நலின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் சில சமயங்களில் நேற்றைய தினமும் தொடரக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன்காரணமாக மக்களின் பாதுகாப்பு கருதி விசேட பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட து என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# புதுமணத் தம்பதியர் விபத்தில் படுகாயம்

பொலநறுவையில் புதுமண தம்பதியர் பயணித்த வாகனம் ஒன்று விபத்துக்கு உள்ளாகியுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மெதகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் புதுமண தம்பதியர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த வாகனத்தில் பயணித்த மாப்பிள்ளை தோழன் மற்றும் சாரதி ஆகியோரும் காயமடைந்துள்ளனர்.

புதுமண தம்பதியினர் தேனிலவுக்காக ஹோட்டல் ஒன்றுக்குச் சென்று கொண்டிருக்கும் போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# இந்திய பிரதித் தூதருடன் அமைச்சர் ஹக்கீம் சந்திப்பு



கொழும்பு,செப்07

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந் திய பிரதித் தூதுவர் டாக்டர் ஷில்பக் என். அம்புலேவுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை அமைச்சரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் சமகால அரசியல் நிலவரம் மற்றும், இலங்கை – இந்திய உறவு தொடர்பில் இதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டிருந்ததாக கூறப்பட்டது.

அத்துடன், இந்திய அரசின் நிதியுதவின் கீழ் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ)

# நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் இன்று

நல்லூர், செப். 05

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் உற்சவத்தை யொட்டி, தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் துர்க்காதேவி மண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு, இன்று மாலை 6.45 - 8.15 வரை நடைபெறும்.

இசைக்கச்சேரியில்-

பாட்டு:- பொன்.ஸ்ரீவாமதேவன், வயலின்:- கா.குகபரன், மிருதங்கம்-வ.ரமணா, கெஞ்சிரா- நா. சிவசுந்தர சர்மா, கடம் - கு.ரவிசங்கர்.

## தினசரி ராசி பலன் (07.09.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆவணித்திங்கள் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமைதுவாதசித்திதி காலை 9.12 மணி வரை பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: பூசம் பகல் 12.56 மணி வரை பின்னர் ஆயிலியம். மரணயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 10.36 மணி முதல்12.08 மணி வரை.

**சுபநேரம்** - காலை 6.04 மணி முதல் 7:34 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆவணி மாத தேய்பிறை திரியோதசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- பூசம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** சஞ்சலமான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் சஞ்சல நிலை காணப்படும். தொழிலில் தொய்வு நிலை காணப்படும். உத்தியோகத்தில் பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சரளமாக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில்பெரும் இடையூறுகள் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் முன்னேற்றமடையும். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்தி நன் மதிப்பைப் பெறுவார்கள்.

**கடகம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வெளிநாட்டுத் தொடர்புகளால் போதிய வருமானம் பெறுவார்கள். சிலருக்கு சொந்த வீடு வாங்கும் யோகம் உண்டு.

**சிம்மம்** கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிலில் கவனக் குறைவு உண்டாகும். அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாக நேரிடும்.

**கன்னி** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். பெண்கள் நன்மையான பலன்களை அடைவார்கள். பெருமைப்படும் படியான காரியங்களை செய்து நல்ல முன்னேற்றம் காண்பார்கள்.

**துலாம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். காரியத் தடை உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும் போது கவனமாக இருப்பது நல்லது.

**விருச்சிகம்** அதிர்ஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். திருமணத் தடை நீங்கி நல் வரன் அமையும். வாகனம் வாங்கும் யோகம் அமையும்.

**தனுசு** யோசனையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். உடல் நிலையில் பாதிப்புக்கள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் அதிருப்தி உண்டாகும்.

**மகரம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். தொழில் வியாபார விருத்தியும். பொருளாதார நிலையில் உயர்வும் உண்டாகும்.

**கும்பம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். விடா முயற்சியும், தன்னமிக்கையும் உருவாகும். வியாபாரத்தில் ஆக்கபூர்வ முன்னேற்றம் உண்டாகும்.

**மீனம்** கீர்த்தியான நாள். பொருளாதாரம் வளமடையும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். சகோதரர்களின் ஆதரவும், நண்பர்களின் உதவிகளும் நன்மையாக அமையும்

**சந்திராஷ்டம நாள்: மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# கந்தபுராண எழுச்சி விழாவில் இன்று...!



இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம் என்ற தொனிப்பொருளில், நல்லூர், கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டுக் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா 2018 நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில், இருபத்து மூன்றாம் நாள் நிகழ்வுகள்,இன்று வெள்ளிக்கிழமை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை இணுவில் சிவகாமி அம்மன் குழுவினரின் பஜனை நிகழ்வும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலையில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில், யாழ். மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, கோப்பாய் மற்றும் நல்லூர்ப் பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிக்ழ்வுகளும் கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பிரதி முதல்வர் திரு.ச.லலீசனின் நாமேல் நடவீர் எனும் தலைப்பிலான கந்தபுராணச் சிறப்புச் சொற்பொழிவும், பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா குழுவினரின் இசை அர்ச்சனை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறவுள்ளன. பங்குபற்றும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும் என்பதை மகிழ்வோடு அறியத்தரு வதோடு, அனைவரையும் இந்நிகழ்விற்கு அன்புடன் அழைக்கின்றோம்.

# சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், செப்.06

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா அவர்களால் 'பக்தியால் யானுனைப் பலகாலும்...." என்ற தலைப்பில் இன்று மாலை 7.30 மணி முதல் 8மணி வரை இல 700, பருத்தித்துறை வீதி, நல் லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் அரு ளுரை நடைபெற உள்ளது.

யாழ்.சின்மயாமிஷன் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது.

## பாராட்டுக்கள்

சசரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவிலின் செயற்பாட்டுப் பிரதேசத்திற்குள் வாழும் க.பொ.த. உயர்தரம் தொழில்நுட்பப் பிரிவில் வேலணை மத்திய கல்லூரியில் கல்வி கற்று வரும் மாணவர் ஒருவரின் குடும்ப வருமான நிலை கருதி அவருக்கு சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் அன்னதான சபை ஊடாக நிதியுதவி வழங்கப்படுகிறது.

சபையின் தலைவர் சுப்பிரமணியம் தில்லைநாதன் அந்த மாணவனுக்கு கல்விச்செலவுகாக க.பொ.த உயர்தரம் கற்கும் காலத்தில் 2020 ஓகஸ்ட் வரை தனது சொந்த நிதியிலிருந்து மாதம் மூவாயிரம் ரூபா கொடுப்பதற்கு முன் வந்து முதல் மாதக் கொடுப்பனவையும் உடன் வழங் கினார் இவரின் இச் செயலை ஆலய உறுப்பினர்க ளும் பொது மக்களும் பாராட்டிய துடன் வாழ்த்துக்களையும் தெரிவித்து பள்ளம் புல முருக னின் அருளாசி அவருக்கு கிடைக்கப் பிரார்த்திக்கின்றனர். (இ)

# ரஞ்சனுக்கு எதிரான வழக்கு; டிசெம்பரிலேயே விசாரணை

கொழும்பு, செப் 07

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்றத்தை அவமதித்தார் எனத் தெரிவிக்கப்படும் வழக்கை எதிர்வரும் டிசெம்பரில் விசாரணை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், விஜித மலல்கொட, எல்.டி.பி. தெஹிதெனிய ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழா மின் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்டபோதே, இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கை ஐவர் கொண்ட நீதிபதிகள் குழாமின் முன்னிலையில், எதிர்வரும் டிசம்பர் 10, 11, 12 ஆம் திகதிகளில் விசாரணை செய்யவுள்ளதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் 21 இல் இடம்பெற்ற, ஊடகவியலாளர் மாநாட்டின்போது, நீதிமன்றங்கள் மற்றும் வழக்கறிஞர்கள் தொடர்பில் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்ட கருத்து நீதிமன்றங்களை அவமதிக்கும் வகையில் இருப்பதாகத் தெரிவித்து, தாக்கல் செய்யப் பட்ட மனுவின் அடிப்படையிலேயே இந்த வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றது.

நாட்டிலுள்ள நீதிவான்கள் மற் றும் வழக்கறிஞர்களில் பெரும் பாலானோர் ஊழல்வாதிகள் என பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குற்றச்சாட்டொன்றை முன்வைத்திருந்தார் எனவும், இது நீதிமன்றத்தை அவமதிப்பதாகவும் தெரிவித்து ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரியான சுனில் பெரேரா மற்றும் சிங்களராவய அமைப் பின் செயலாளர் மாகல்கந்த சுதத்த தேரர் ஆகியோரினால் உயர்நீதிமன்றத்தில் இரு வேறு மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மஹிந்தவால் மட்டுமே முடியும் என்பதை மக்கள் காட்டிவிட்டனர்: கோட்டா பெருமிதம்

ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மட்டுமே முடியும் என்பதையே இந்த மக்கள் வெள்ளம் காட்டியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ரஜபக்ச தெரிவித்துள்ளார்.

'ஜனபலய கொலம்பட்ட' பேரணியில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்பார்த்ததை விட அதிக எண்ணிக்கையான மக்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர். இந்த மக்களின் கருத்தின் அடிப்படையில் எமது அடுத்தகட்ட நடவடிக்கைகள் அமையும்.

மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டும் என்ற கோரிக்கையை பேரணியில் கலந்துகொண்ட மக்கள் விடுத்துள்ளனர். இந்த நாட்டை சிறந்த முறையில் நிர்வகிக்க வேண்டும்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். பாதாள உலகக் குழுவினரைக் கட்டுப்படுத்த வேண்டும். இவையனைத்தும் மஹிந்த ராஜபக்ஷவால் மட்டுமே முடியும்.

இதனை இந்தப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் வெள்ளம் காட்டியிருக்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புல்லுமலை தொழிற்சாலைக்கு எதிரான போராட்டத்தை தனி மனித, தனி இனத்துவ எதிர்ப்பாக சித்திரிக்க வேண்டாம்

## ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்தல்



திருகோணமலைபுல்லுமலைதொழிற் சாலைக்கு எதிரான இன்றைய போராட் டத்தை தனி மனித, தனி இனத்துவ எதிர்ப்பாக எவரும் சித்திரிக்க வேண்டாம் எனநாடாளுமன்றஉறுப்பினர்ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

சுயாதீனமானதும், சுதந்திரமானதும், அடிப்படைத் தேவையுடனும் மக்கள் காட்டுகின்ற நியாயமான எதிர்ப்பை யாரும் விளம்பர அரசியலுக்கோ, சுயநல அரசியலுக்கோ பயன்படுத்தாமல் பக்குவமாக நடந்து கொள்வோம். மக்களின் உணர்வுகளை மதிக்கின்றோம், மனப்பூர்வமான ஆதரவை அளிக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புல்லுமலை தண்ணீர்த் தொழிற் சாலைக்கு எதிராக தமிழ் உணர்வாளர்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

மட்டக்களப்பு, புல்லுமலையில் அமைக்கப்படுகின்ற தண்ணீர்த் தொழிற் சாலைக்கு எதிராக மக்கள் காட்டுகின்ற நியாயமான எதிர்ப்பினை, மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றோம்.

உணர்வுகளின் பிரதிபலிப்பாக மக்கள் காட்டுகின்ற சாத்வீகமான எதிர்ப்பையும் ஆதரிக்கின்றோம்.

இந்த எதிர்ப்பானது தனிப்பட்ட விரோத, குரோதத்திற்கு அப்பாற்பட்டதும், அடிப்படைத்தேவையான குடிதண்ணீரின் இருப்பியலுடனும் சம்பந்தப்பட்டதாகும்.

புல்லுமலையை அண்டிய கிராமங்களான உறுகாமம், மங்களகம, கித்துள் போன்ற கிராமங்களில் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என மூவின மக்களும் சகோதரர்களாக வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த நிலையில் ஒரு கிராமத்தில் ஏற்படக் கூடிய நில வறட்சி ஏனைய கிராமங்களிலுமுள்ள மூவின மக்களையும் நீண்ட காலப்போக்கில் பாதிக்கவும் கூடும்.

நிலக்கீழ் நீரைப் பாதுகாக்க வேண்டியது எதிர்கால சந்ததியின் தேவையோடு தொடர்புபட்டது என்பதைக் காய்தல், உவத்தல் இன்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

எனவே, பொறுப்புமிக்க தலைவர்கள் என்ற வகையில் இதனைப் புரிந்து கொள்வோமாக. இக்கால, எதிர்காலச் சந்ததியைப் பாதிக்கக் கூடிய செயலை எவராக இருந்தாலும் செய்யாதிருப்போம்.

இன்றைய தேவை ஆக்ரோசமான உணர்ச்சிக் கொப்பளிப்புகள் அல்ல. அறிவுபூர்வமான பக்குவமான நடத்தைகளேயாகும்.

நிலையான அபிவிருத்திகளையும், நீடித்த தொழில் வாய்ப்புகளையும் ஆதரிப்போம். அப்படியான கருமங்களை ஆற்றுவோரை வாழ்த்தி வரவேற்போம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

### மட்டு . செங்கலடி பாடசாலை ஒன்றின்

## மாணவனைக் கண்மூடித்தனமாக தாக்கிய காட்சி காணொலியில்!

செங்கலடி பாடசாலை ஒன்றில் , கணிதபாட புத்தகம் கொண்டு வராததன் காரணத்தால் மாணவர் ஒருவரை ஆசிரியர் கடுமையாக தாக்கியுள்ளார்.

செங்கலடிப் பகுதியைச் சேர்ந்த தரம் பத்தில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் புத்தகம் கொண்டுவரவில்லை என்பதற்காக இந்த மாணவனை ஆசிரியர் கண்மூடித்தனமாக தாக்கியுள்ளார் என அந்த மாணவன் காணொலி ஒன்றின்மூலம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த காணொலி தற்போது சமூக வலைத்தளங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பாடசாலையில் கணிதபாட ஆசிரியராக கடமைபுரியும் ஏறாவூரைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் மீதே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தனது நெற்றியில் பலகையால் ஆசிரியர் தாக்கினார் எனவும், இதன் காரணமாக தனக்கு எட்டுத் தையல்கள் போடப்பட்டுள்ளன எனவும் தொடர்ந்தும் தான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளேன் என்றும் அந்த மாணவன் தெரிவித்துள்ளார்.

---

# விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களை நியமிக்கக் கோரி திருமலையில் கவனவீர்ப்பு

## தேர்வு செய்தும் தாமதம் ஏன் என அவர்கள் கேள்வி



திருகோணமலை, செப்.07

விளையாட்டு பயிற்றுவிப்பாளர் நியமனத்தை விரைவாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து திருகோணமலையில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டு கிழக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றும் கைளிக்கப்பட்டது.

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாக தெரிவுசெய்யப்பட்டோர் கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன் இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அசங்க அபேவர்த்தனவிடம் மகஜர் கையளிக்கப்பட்டு விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களாக தெரிவு செய்யப்பட்டோரின் நியமனத்தை துரிதப்படுத்த வேண்டுமென பணிப்புரை விடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள வை வருமாறு-

அரச பாடசாலைகளில் விளையாட்டு துறையினை விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் கல்வி அமைச்சானது அரச பாடசாலைகளில் காணப்படும் விளையாட்டு பயிற்றுவிப் பாளர் 3.850 வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய நாடளாவிய ரீதியில் பாடசாலை மட்டங்களில் விளையாட்டுத் துறையில் தேசிய, மாகாண மட்டங்களில் சாதனை புரிந்தவர்களிடம் விண்ணப்பம் கோரி தகைமை அடிப் படையில் 3.850 பேரை தெரிவு செய்திருந்தது.

கல்வி அமைச்சு கோரிய தகைமை அடிப்படையில் கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டோர் கடந்த வருடம் நேர்முகத் தேர்விற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் உடற்தகைமை தேர்விற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த 2017இல் உடற்தகைமை தேர்வு இடம் பெற்றிருந்தாலும் இந்த வருடம் ஜுன் மாதமளவில் நியமனத்துக்கான பெயர்ப்பட்டியலை கல்வி அமைச்சு மாகாணங்களுக்கு அனுப்பி இருந்தது.

விளையாட்டு பயிற்றுவிப்பாளர் நியமனமானது ஜுன் மாதம் 25ஆம் திகதி வழங்குவதற்காக கல்வியமைச்சால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் சில மாகாணங்களின் இழுபறியினால் அந்நியமனம் கொடுபடாமல் இன்றுவரை எந்த தீர்மானமும் இன்றி இழுத்தடிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்த நியமனத் தாமதத்தால் 3850 இளைஞர், யுவதிகள் தங்கள் அன்றாட வாழ்வில் பல இன்னல்களை எதிர் நோக்குகின்றனர்.

ஏற்கனவே, செய்த தொழில்களை விட்டு விளையாட்டு பயிற்றுவிப்பாளர் நியமனத்துக்காக காத்திருக்கின்றனர்.

இரண்டு மாதங்கள் கடந்து நிலையில் நியமனம் தொடர்பில் பல செய்திகள் வெளியாகி உள்ளன. இந்த நியமனம் அரசினால் இரத்து செய்யப்பட்டு விட்ட ன என பொய்ப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகி ன்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது .

---

# தாபரிப்பு பணத்தை செலுத்தாத நபருக்கு 18 மாத சிறைத்தண்டனை!

திருகோணமலை, செப்.07

திருகோணமலை - புல்மோட்டை பகுதியில் ஒரு இலட்சத்து 72 ஆயிரத்து எண்ணூறு ரூபா தாபரிப்பு பணத்தைச் செலுத்தாத நபரொருவருக்கு 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று முன்தினம் இந்த நபரை ஆஜர்ப்படுத்திய போதே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர் தனது நான்கு பிள்ளைகளுக்கும் ஒரு லட்சத்து 72 ஆயிரத்து 800 ரூபா தாபரிப்பு பணத்தை செலுத்தாது தலைமறைவாக இருந்த நிலையிலே மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதற்கமைய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்து, திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தி போதே நீதிபதி இந்த தண்டனையை வழங்கியுள்ளார்.

---

# அர்ஜுன் மகேந்திரன் நாட்டை விட்டு சென்ற பின் தொடர்பு கொள்ளவில்லை!

## பிரதமர் ரணில் கூறுகிறார்

கொழும்பு, செப்.07

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் இலங்கையிலிருந்து வெளியேறிய தன் பின்னர் தனது சட்டத்தரணியின் ஆலோசனையின்படி அவருடன் எந்தவித தொடர்பையும் தான் வைத்திருக்கவில்லையென பிரதமர் ரணில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் விடுத்த வினா ஒன்றுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.



பிரதமர் சிங்கப்பூர் சென்றிருந்த போது அர்ஜுன் மகேந்திரனைச் சந்தித்தார் என சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அவர் பிரதமருடைய தனிப்பட்ட நண்பன் என்ற வகையில் இலங்கைக்கு அழைத்து வர வேண்டும் என்ற பொறுப்பு பிரதமருக்கு இல்லையா? என ஜே.வி.பி.யின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# இன்னும் ஒரு தசாப்தத்துக்கு ஐ.தே.க. ஆட்சியே தொடரும்

## அடித்துக் கூறுகிறார் அகிலவிராஜ்

கொழும்பு, செப் 07

இன்னும் ஒரு தசாப்த காலத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியையை எவராலும் அசைக்க முடியாது என்று கல்வி அமைச்சரும் ஐ.தே.கவின் பொதுச் செயலாளருமான அகிலவிராஜ் காரிய வசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தவேண்டும் என்பதே எமது விருப்பமும். பழைய முறையிலேனும் தேர்தலை நடத்த வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதை மனதில் கொண்டு, எதிர்வரும் தேர்தல்களிலும் வெற்றிபெறலாம் என்ற எண்ணத்துடனேயே தேர்தலை விரைவு படுத்தக் கூட்டு எதிரணி கோரி வருகிறது. அது சாத்தியப்படாது.

எதிர்வரும் பத்து ஆண்டுகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியே இந்த நாட்டில் நீடிக்கும்.

கூட்டுஎதிரணியினர் தற்போது அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ள கொழும்புக்கு மக்களை அழைத்துக் கொண்டு வருகிறார்கள்.

உண்மையில், இவர்கள் எதற்காக இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ள வேண்டும்? இவர்களுக்கான இலக்குதான் என்ன? இவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை எதற்காக முன்னெடுக்கிறார்கள் என்று புரியவில்லை. 2001, 2005ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி கொழும்புக்கு மக்களை வரவழைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியமைக்கு ஒரு காரணம் இருக்கின்றது.

அதேபோல், கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற கொலை, கொள்ளை, கடத்தல் சம்பவங்களுக்கு எதிராகவும் நாம் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளோம். இவ்வாறு கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்கு எல்லாம் ஒரு காரணம் இருக்கின்றன. ஆனால்,



இந்த ஆர்ப்பாட்டத்துக்கு உண்மையான காரணம் என்ன?

வடக்கில், தமிழீழ விடுதலைப் புலிகள் செய்ததைத்தான் கூட்டு எதிரணியினரும் செய்கிறார்கள். தமது தேவைக்காகப் பொதுமக்களை புலிகள் எவ்வாறு பலியாக்கினார்களோ, அதேபோன்றுதான் தங்கள் மீதான குற்றங்கள், வழக்குகளில் இருந்து தப்பிக்க எதிரணியினர் மக்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

எவ்வாறாயினும், நாம் இந்த விடயங்கள் தொடர்பில் ஜனநாயக ரீதியாகவே செயற்படுவோம். அந்தத் தரப்பினர் சரத் பொன்சேகாவுக்கு செய்ததுபோல் எல்லாம் நாம் நடந்து கொள்ளமாட்டோம். இந்த நாட்டில் தற்போது பூரண ஜனநாயகம் உள்ளது. ஊடகம் மற்றும் கருத்துச் சுதந்திரம் மேலோங்கியுள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, நாம் முழுமையான சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

நாம் இந்த அரசைப் பெரிய சுமையுடன் தான் பொறுப்பேற்றோம். இந்நிலையில் கூட மக்களுக்குச் சுமையை வ்ழங்கிவிடக் கூடாது என்றே முடிந்தவரை சேவையாற்றிக் கொண்டிருக்கிறோம். அரசு ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், பெற்றோல், டீசல் உள்ளிட்டவற்றின் விலை கடந்த அரசை விட இன்னும் குறைவாகத்தான் உள்ளன.,

அத்தியாவசியப் பொருள்களின் விலையில் காலத்துக்கு ஏற்ப சில மாற்றங்கள் வந்தாலும், கடந்த அரசு போல நாம் மக்களைச் சிக்கலில் தள்ளவில்லை. சொல்லப்போனால், ஐரோப்பிய நாடுகளில் இல்லாத அளவுக்குக்கூட எமது நாட்டில் ஜனநாயகம் உள்ளது – என்றார்.

(ஐ)

# இராணுவம் அழைத்துச் சென்ற எங்கள் உறவினர்கள் எங்கே?

## கிழக்குப் பல்கலை முன்பாக போராட்டம்



அம்பாறை, செப். 07

1990ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்திருந்த போது படையினரால் கொண்டு செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் 28ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 05ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்து 158 பேர் படையினரால் விசாரணைக்கு என அழைத்துச்செல்லப்பட்டனர். எனினும், இன்று வரை அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

இந்தநிலையில், கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக மட்டக்களப்பு மாவட்டவலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் சங்கமும், கிழக்குப் பல்கலைக் கழக கலை, கலாசார பீட மாணவர்கள் ஒன்றியமும் இணைந்து அதனை நினைவு கூரும்வகையில்நினைவேந்தல் நிகழ்வை நடத்தின.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி பிரார்த்தனைகளி லும் ஈடுபட்டனர். கவனயீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

தஞ்சமடைந்திருந்த 158 பேரும் காணாமல் போய் 28 வருடங்களை கடந்துள்ள போதிலும் அவர்கள் குறித்து உரிய பதிலை இதுவரை அரசு வழங்கவில்லை. எமது நிலைமைகள் தொடர்பில் எந்தக் கவனமும் செலுத்தவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

# வவுனியா வர்த்தக சங்கத்தின் அலுவலகம் திறந்து வைப்பு

வவுனியா, செப் 07

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் புதிய அலுவலகத் திறப்பு விழா நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் வர்த்தகர் சங்கத்தின் தலைவர் சுஜன் சண்முகராஜா தலைமையில் இடம்பெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர அபயவிக்கிரம வர்த்தகர் சங்கத்தின் பெயர்ப் பலகையைத்திரைநீக்கம் செய்து வைத்தார். அலுவலகத்தை பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் இணைந்து வவுனியா நகரசபையின் தலைவர் இராசலிங்கம் கௌதமன் நாடா வெட்டித் திறந்து



வைத்தார்.

இதன்போது வர்த்தகர் சங்கத்தின் நலனைக் கருத்தில் கொண்டு நாகா ஜுவல்லறி உரிமையாளரால் பாதுகாப்புக் கமராக்களும், வெஸ்ட் செலக்சன் வர்த்தகர் நிலையத்தினரால் போட்டோ பிரதி செய்யும் இயந்திரமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ஐ-100)

# மீள்குடியேற்ற இடங்களிலும் உப தபாலகங்கள் வேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து

கொழும்பு, செப் 07

மீள்குடியேற்றப் பகுதிகளில் ஏற்கனவே இருந்த உப தபாலகங்கள் மீள செயற்படுத்தப்பட வேண்டியுள்ளமைடன் புதிதாக உப தபாலகங்கள் நிறுவப்பட வேண்டியத் தேவைகளும் உள்ளன.

–இவ்வாறு வலியுறுத்தினார் நாடாளு மன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா.

அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்டத்தின் கீழான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்–

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல்லவராயன்கட்டு மற்றும் முகமாலை உப தபாலகங்கள் இன்னமும் மீள செயற்படுத்தப்படாத நிலைமைகள் காணப்படுகின்றன.

முகமாலை உப தபாலகம் 2009ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலை காரணமாகச் செயற்பாடுகளை இழந்துள்ள நிலையில் இது வரையில் மீளச் செயற்படுத்தாத காரணத்தினால் இங்குள்ள மக்கள் யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாள் நோக்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் யாழ் மாட்டத்திலும் மன்னார் மாட்டத்திலும் ஏற்கனவே செயற்பட்டிருந்த உப தபாலகங்கள் சில இதுவரையில் மீளத் திறக்கப்படாதுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் புதுமுறிப்பு மாயவனூர், செல்வாநகர், பாரதிபுரம், ஜெயபுரம், பள்ளிக்குடா, புன்னைநீராவி போன்ற பகுதிகளில் புதிய உப தபாலகங்களை நிறுவ வேண்டியத் தேவை உள்ளது. இத்தகைய தேவைகள் அநேகமாக மீள்குடியேற்ற பகுதிகளுக்கு மிகவும் அத்தியவசியமாகவுள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோன்று அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எல்லைப் பகுதியான பொத்துவில், தாண்டியடி பகுதியில் உப தபாலகத்திற்கென நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் தற்போது சுமார் 23 வருடங்கள் கழிந்துள்ள நிலையிலும் இதுவரையில் செயற்படுத்தப்படாமல் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

இந்த உப தபாலகம் செயற்படாமை காரணமாக இப் பகுதியில் வசிக்கின்ற சுமார் 200க்கும் மேற்பட்ட முதியோர்கள் உள்ளிட்ட ஏனைய மக்கள் அரச உதவித் தொகைகளைப் பெறுவதற்காக சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள திருக்கோவில், விநாயகபுரம் கோரக்களப்பு உப தபாலகங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

சில உப தபாலகங்கள் தபாலகங்களாக தரம் உயர்த்தப்பட வேண்டியத் தேவையும் இருக்கின்றது. குறிப்பாக யாழ் மாட்டத்தில் தாழையடி, கோண்டாவில், மல்லாகம், குருநகர் போன்ற உப தபாலகங்கள் இவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

மன்னார் மாவட்டத்தில் முருங்கன் தபாலகக் கட்டடத்தில் பொலிஸார் நிலை கொண்டுள்ளனர் எனத்தெரிய வருகின்றது. இதனை விடுவித்து தபாலகத்தின் செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

முல்லைத்தீவு தபாலகம் மாவட்ட அலுவலகத்திலேயே இன்னமும் செயற்பட்டு வருகின்ற நிலை காணப்படுகின்றது. எனவே முல்லைத்தீவு தபாலகத்திற்கென தனியானதொரு கட்டடம் அமைக்கப்பட வேண்டிய தேவையும் இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் தபால் துறை சார்ந்து இதுவரையில் நிரப்பப்படாத பல வெற்றிடங்கள் உண்டு. தொழில்வாய்ப்புகளின்றி பலர் வடக்கு மாகாணத்திலே இருக்கின்ற நிலையில் இவர்களைக் கொண்டு மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.


யாழ்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பழைய வாகனங்களே பயன்பாட்டில் இருப்பதாகத் தெரிய வருகின்றது. அதே போன்று மன்னார் அஞ்சல் அத்தியட்சகரின் வாகனமும் பழைமையானதாகவே இருன்னிக்ற எனக் கூறப்படுகின்றது. எனவே புதிய வாகனங்கள் வழங்குவது தொடர்பில் அமைச்சர் அவதானமெடுக்க வேண்டும்.

இந்த நாட்டில் தபால் சேவையைத் தற்கால நவீன கேள்விகளுக்கேற்ப விஸ்தரித்து மேற்கொள்வதற்கு உரிய அனைத்து ஏற்பாடுகளையும் எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் பணியாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளினதும் தொழில் ரீதியிலான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றேன்.–என்றார்.

(ஐ)

காலைக்கதிர்
Kalaikkathir





# மரபணு மாற்றப்பபட்ட மரங்களால் ஏற்பமம் பயன்கள், தீமைகள்?

உலகெங்கும் வாழும் சாமானியர்களுக்கு கூடத் தெரிந்த தகவல் தான், புவி வெப்பமயமாக்கல், ஓசோனில் ஓட்டை, நிலையான தட்ப வெப்ப நிலை இல்லாமை, இவை அனைத்திற்குமான காரணம் ஒன்றே ஒன்று தான். நமது வாழ்க்கைமுறையும், நவீன மயமாக்கலினாலும், அதை நாம் ஏற்றுக் கொண்டு இயைந்து வாழத்துவங்கியதால் வந்த விளைவுகளால் தான். இந்த நவீனமயமாக்கலில் மரங்களையும் ஆய்வுகூடங்களில்செயற்கைமுறையில் உருவாக்கும் முறை என்ற ஒன்று சமீபத்தில் பிரபலமாகி வருகின்றது.

ஆய்வு செய்வதற்கென்று ஒரு வரைமுறை இல்லையா? என்று கேள்வி எழாமலில்லை. ஆனால் அந்த ஆராய்ச்சியின் பலனையும், விளைவையும் நாமும் தெரிந்து கொள்வோம்.

### அறிமுகம்

உலகமே காடுகளையும், காடுகளின் வளங்களையும் பாதுகாப்பதில் அலட்சியமாக இருக்கும் இந்தக் காலத்தில், பல சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மரங்களை காப்பது, மரம் வளர்ப்பது என்று விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றனர். அதே சமயம் ஆய்வு கூடத்திற்குள்ளேயே தனது முழு காலத்தையும் கழிக்கும் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள், இயற்கைக்கு இசைவாக தாங்கள் கண்டுபிடித்ததாக கூறும் ஒன்று தான் மரபணு மாற்றப்பட்ட மரம்.

பொதுவாக எந்த ஒரு கண்டுபிடிப்பையும் உடனடியாக, ஆணிவேர் வரை ஆராயத் தொடங்கும் நம் ஊரில் இருக்கும் கூகுள் அறிஞர்கள் கூட எடுத்தோம் கவிழ்த்தோம் என்று எதிர்ப்பு தெரிவிக்காதபடியான கண்டுபிடிப்பு



போலதான்பெயர்குறிக்கின்றது. மரபணு மாற்றப்பட்ட மரங்களின் தயாரிப்பை, ஒரு குறிப்பிட்ட மரம் உருவாவதற்கு தேவைப்படும் தட்பவெப்பத்தையும், மரபுசார் சூழலையும், செயற்கை மரபணு மூலமாக கண்ணாடி பேழையிலோ, உகந்த தளத்திலோ ஏற்படுத்தி, பல நாள்கள் கண்காணிப்பில் உருவக்கப்படுவது தான் மரபணு மாற்றப்பட்ட மரம்.

மரபணு மாற்றப்பட்ட மரம் என்பது மட்டுமல்ல, மரபணு ஆய்வில், மரபணு ஆராய்ச்சி மூலம் அநேக உயிரினங்களை உருவாக்குகின்றனர். இந்த மரபணு மாற்றப்பட்ட மரங்களை உருவாக்கும் யோசனை அமெரிக்கர்களுக்கு 2010இல் உதித்தது. முதலில் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுத்தியது சோளம் மற்றும் சோயா வகையான செடிகளைக் கொண்டுதான். அதாவது செயற்கையாக சோளச் செடியையும், சோயாவையும் உருவாக்க முற்பட்டன சில தனியார் ஆராய்ச்சி கூடங்கள். அதில் வெற்றி கண்டனரா என்பது பற்றி சரியான அறிக்கைகளை அவர்கள் வெளியிடவில்லை.

இதன் பயன்களைப் பற்றி அறிஞர்கள் கூறுகையில், முதலில் வணிகர்களுக்கும், காடும் காடு சார்ந்த பகுதிகளில் தொழில் முனைவோருக்கும், நுகர்வோருக்கும் பயனளிப்பதாக கூறி அறிமுகப்படுத்தினர். உண்மையான பயன்களாக அமைந்தது, மரங்களின் எதிர்ப்பு சக்தி நிலையாக இருக்கும், இயற்கையான மரங்களில் அதீத வளர்ச்சியின் ஒரு பகுதியாக சில நேரங்களில் தென்படும் லிக்னின் வளர்ச்சி கட்டுக்குள் இருக்கும், எந்தச் சூழலிலும் இந்த மரபணு மரத்தின் வளர்ச்சி தேங்கிவிடாது. அதுமட்டுமில்லாமல், சராசரி மரங்கள் வளருவதை விட மிகக்குறுகிய காலத்தில் மிகுந்த வளர்ச்சியைப் பெற்று, இயல்பாக பலனை அளிக்கும் என்பது கூடுதல் சிறப்பு.

இன்று இவ்வகையில் வளர்க்கப்படும் மரங்கள், காகிதங்கள் தயாரிக்க

## ஆய்வுகள் இன்னும் தொடர்கின்றன

மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. சரியான இடைவெளியில், மரங்கள் வளரும் என்பதால், மிகச் சிறிய இடத்தில் நிறைய மரங்களை வளர்க்க முடிகிறது. இதுவும், அந்த மரத்தினால் கிடைக்கும் பலன்கள் கணிசமான அளவில் கிடைக்கின்றன. இந்த மரங்களை பயன்படுத்தி காகிதங்கள் தயாரிக்கப்படும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் சுற்றுப்புற மாசு, வரையறைக்குள் இருக்கும்.


நிச்சயமாக நகரமயமாக்கல் அதிகமாகி கொண்டிருக்கும் தருணத்தில், பாதிப்புகள் சிறு சிறு அளவில் ஏற்படுத்தும் என்றபோதிலும், ஒரு நல்ல கண்டுபிடிப்பு என்றே சொல்லலாம். ஏனெனில், இந்த மரபணு மாற்றப்பட்ட மரங்களும், இயற்கை மரங்கள் தரும் பலன்களில் முக்கால்வாசி கொடுக்கிறது. அந்த குறிப்பிற்கான சான்று தான் காகிதம்.

தற்போது, இந்தச் செயற்கை முறையில்ஒருதனியார்நிறுவனம்யூகலிப்டஸுக்கென்றே ஒரு தனி காடை ஏற்படுத்தி, மருத்துவத்திற்கு பயன்படும் வகையில் அதனைக் கொண்டு வணிகம் செய்து வருகின்றது. இந்த யூகலிப்டஸ் காட்டில் இந்த செயற்கையான மரபணு முறையில் உருவாக்கப்பட்ட யூகலிப்டஸ் மரங்கள் தான் அதிக மரக்கூழ்கள் அளிக்கும் தளமாகும். இதனை அந்த நிறுவனம் பெருமையாகக் கூறிக்கொள்கிறது.

'ஃப்யூச்சுராஜீன்' என்பவர் கிட்டத்தட்ட 11வருடங்கள்யூகலிப்டஸ்மரங்களுக்கான இந்த ஆராய்ச்சியை 100 ஹெக்டேர் நிலத்தை, இஸ்ரேல், சீனா மற்றும் பிரேசிலின் செள பாலோ என்ற இடங்களிலும் வாங்கி, வித விதமான தட்பவெப்பத்தில் சோதித்து, அதில் ஆய்வுகள் செய்து, அதனால் ஏற்படும் பலன்களை உணர்ந்து, வணிகத்தில் இறங்கியுள்ளார். அரபி டாப்ஸிஸ் என்னும் ஒரு சிறிய பூக்களை கொண்டுள்ள செடிகளின்மரபணுக்களைஆய்வுக்கூடங்களில் சேகரித்து, இயற் கையாக செடிகள் வளர்வதற்கு மாறாக மரபணு முறையில் செயற்கையாக செடிகளை வளர்த்து வண்கம் செய்ய முற்பட்டது. இதற்காக பல அரபிடாப்ஸில் விதைகளை சேமித்து பெரிய அளவிலான வணிகத்திற்கு அடித்தளம் போட்டது அந்த நிறுவனம். இதே நிறுவனம். அந்த மரபணு யூகலிப்டஸ் மரங்கள் ஒரு ஆண்டுக்கு 5 மீற்றர் வளரும் என்கின்றது. இது இயல்பான யூகலிப்டஸ் மரங்களின் வளர்ச்சியிலிருந்து 20 முதல் 30 சதவிதிதம் அதிகம் என்பது குறிப் பிடத்தக்கது.

### பாதிப்புகள் அல்லது தீமைகள்

நான் தேடியவரை, இயற்கை மரங்களால் எப்போதும் நமது சுற்றுச்சூழலில் ஒரு சுழற்சி ஏற்படுகிறது. அதாவது, எகோசைக்கிள் என்று சொல்லப்படுகின்ற சுற்றுச்சூழலில் ஏற்படும் புணர்தல். இந்த சுழற்சி மரபணு மாற்றப்பட்ட மரங்களால் இயல்பாக நடக்கும் என்று கருதி விட முடியாது. ஏனெனில், இந்த



அறிவியல் முறையில் அமெரிக்காவில் காடுகளை பாதுகாத்து வருகின்றது ஓர் இணையமே, இது சுற்றுச்சுழலில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று முகப்பில் பெரிய எழுத்துக்களில் பகிர்ந்துள்ளது. இதிலேயே அதனால் மிக மெல்லமாக நடைபெற இருக்கும் ஆபத்துகளைப் பற்றிய புரிதல், தெளிவாக புரிந்தால் தான், இந்த அறிவியல் முறை ஆதரிக்க்கூடிய ஒன்றா என்பதை நாம் தீர்மாணிக்க முடியும்.

### சர்ச்சைகள்

அறிவியல் ரீதியான சர்ச்சைகள் சில உள்ளன. மரபணு மாற்றப்பட்ட செடிகளில் மூலமாக கிடைக்கும் பயிர்களை உட்கொள்கின்றமையால் எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை என்று ஓர் ஆய்வு முடிவு தெரிவிப்பதாக சில இணையங் கள் குறிப்பிடுகின்றன. ஆனால், அந்தம் ஓர் ஆய்வின் முடிவு தட்பவெப்ப நிலையில் இருக்கும் பயிர்களை மட்டும் வைத்து அளிக்கப்பட்ட முடிவு என்றும் அனைத்து தட்ப வெப்பத்திலும், இதனை சோதித்துப் பார்த்து கூறுவதே ஒரு தெளிவான ஆய்வு முடிவாக இருக்கும் என்கின்றனர் சில அறிஞர்கள். இதில் இன்னொரு கோணத்தில் அணுக வேண்டியுள்ளது.

கடந்த 8 ஆண்டுகளில் இந்த மரபணு மாற்றப்பட்ட உயிரினங்களின்



ஆராய்ச்சி எந்த விதத்திலும் அடுத்த கட்டத்தை எட்டவில்லை. காரணம் இதன் விளைவுகள் எவ்வாறானாதாக இருக்கும் என்கின்ற குழப்பம் இருக்கிறது. அதுவும், எல்லா வளர்ந்த நாடுகளிலும் இந்த மரங்களும், அதனால் கிடைக்கப்படும் பயிற்களைக் கொண்டும் வணிகம் நடைபெறவில்லை. இதனால் வரும் ஆபத்துகளை உணர்ந்த அறிஞர்கள், அதனை அமல்படுத்த தயங்குகிறார்களா? இல்லை, இதில் முதலீடு செய்ய பண முதலைகள் விரும்புவதில்லையா? தெளிவான ஆய்வு முடிவுகள் தான் பதில் கூற முடியும்.

இந்தியாவில் மரபணு சார்ந்த ஆய்வுகள் அமெரிக்க நாட்டில் நடக்கும் அளவிற்கு நடப்பதில்லை. காரணம் இங்கிருக்கும் சூழல் தான்.

இன்னும் மரபணு மாற்றப்பட்ட மரங்களைக் கொண்டு காடுகளை ஏற்படுத்துவதை திட்டமிட்டு, இங்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கென்றே இருக்கும் கூட்டங்களிலிருந்து தப்பித்து அதனை இந்திய மண் ணில் அதனை சோதித்துபார்ப்பது என்பது அதிககாலம்தேவைப்படும் ஒரு யோசனையாகும்.

இருப்பினும், இந்த கண்டுபிடிப்பினால் ஏற்படும், நன்மைகளையும், தீமைகளையும் மேலும் பல ஆய்வுகளின் முடிவுகளைக் கொண்டு தான், ஏற்பதா? எதிர்ப்பதா என்பதை முடிவெடுக்க முடியும். ஆயினும் தேவையில்லாத கண்டு பிடிப்புகளுக்கு கவர்ச்சிகரமான விளம்பரங்கள் செய்து வணிகம் செய்யும் நிறுவனங்களுக்கு மத்தியில், பயனுள்ள கண்டுபிடிப்புகளுக்கு தனது நேரத்தையும், நிதியையும் செலவழித்த மனிதர்களை பாராட்டலாம்.

*

காலைக்கதிர் Kalaikkathir



# இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோருக்காக பிரித்தானிய நாடாளுமன்றத்தில் விசேட மாநாடு










காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாளையொட்டி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகளில் இடம்பெற்றிருக்கும் நிலையில் இலங்கைத்தீவில் காணாமலாக்கப்பட்ட தமிழர்களுக்கான குரலும் ஓங்கி ஒலித்துள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு இலங்கை உறவுகளுக்காக பிரித்தானியாவில் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம் ஓகஸ்ட் 30 ஆம் திகதியன்று நடைபெற்றது. அதேவேளை அதன் அடுத்தகட்ட அரசியல் நகர்வான மாநாடொன்று பிரித்தானிய நாடாளுமன்ற கட்டடத்திற்குள் புதன் கிழமையன்று மாலை 6 மணிமுதல் 9 மணிவரை நடைபெற்றது.

இதில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டு நீதிவேண்டி போராடும் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அதன் செயற்பாட்டாளர்களும் மற்றும் மனித உரிமை சட்ட வல்லுநர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமலாக்கப்பட்டோருக்கு நீதிகோரி ஐ.நா குழுவின் பார்வைக்கு கொண்டு செல்லும் நோக்கமாக மாநாட்டில் கலந்துரையாடப்பட்டது.

“2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் கடைசி நாள்களில் இலங்கை இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என தெரியாமல் வாழ்க்கையே போராட்டமாக எமது உறவுகள் அல்லாடுகின்றார்கள்.

“உலகிலேயே மிக அதிகமானவர்கள் காணாமற் போனவர்களின் நாடுகளில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது என ஜநாவின் புள்ளிவிவரம் கூறுகின்றது. 2009 போரின் இறுதி நாள்களில் இலங்கை பாதுகாப்பு படையினரிடம் குடும்பம் குடும்பமாக தங்களை ஒப்படைத்த பலரும் காணாமல் போயுள்ளனர். அதாவது தங்களுக்கு தீங்கு நேராது என்ற இலங்கை படையினரின் உறுதி மொழிகளை நம்பியே தங்களை ஒப்படைத்தவர்களும் தங்கள் உறவுகளை ஒப்படைத்து கொண்டவர்களும் காணாமல் போயுள்ளனர்” – என்று மாநாட்ல் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

இறுதியாக, இலங்கை அரசபடைகளால் நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு நீதி கிடைக்கும் வரை ஓயமாட்டோம் என்ற சூளுரையோடு மாநாடு நிறைவு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதிகளை துப்புரவு செய்தனர் ‘ஜனபலய’ போராட்டக்காரர்!

கூட்டு எதிரணியினரின் ஜனபலய போராட்டம் நேற்று முன்தினம் இரவு முடிவுக்கு வந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டோர் வீதிகளை துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட் டனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டு எதிரணியினரின் ஜனபலய போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பங்குகற்றினர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு போராட்டம் முடிவுக்கு வந்தது.

இதனையடுத்து, இந்த வீதிகளில் காணப்பட்ட குப்பைகளைத் துப்புரவு செய்யும் பணிகளில் போராட்டக்காரர்கள் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# ஆர்ப்பாட்டத்தின் இடையில் வெட்கமடைந்து மஹிந்த சென்று விட்டார்; அஜித் பி பெரேரா





அரசை கவிழ்ப்பதாக கூறி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி எவ்வித திட்டமிடலும் நோக்கமும் கொண்டிருக்கவில்லை.

இதனால், அந்த ஆர்ப்பாட்ட பேரணி தோல்வியடைந்து விட்டது. மேலும் ஆர்ப்பாட்டத்தின் இடை நடுவே மஹிந்த வெட்கமடைந்து பேரணியில் இருந்து சென்றுவிட்டார் என இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அஜித் பி பெரேரா மேலும் தெரிவித்தவை வருமாறு–

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி மஹிந்த தலைமையிலேயே முன்னெடுக்கப்பட்டது. அங்கிருந்த ஏனைய அரசியல்வாதிகள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எவ்வித முன்னுரிமையும் வழங்கவில்லை. குறிப்பாக ஊடகங்களின் முன்பாக மஹிந்த ராஜபக்ஷ வை தவிர ஏனைய அரசியல்வாதிகளே உரையாற்றினார்கள்.

இதைக் கண்ட மஹிந்த ராஜபக்ஷ கோபமடைந்து வெட்கத்தினால் ஆர்ப்பாட்டத்தின் இடையே அங்கிருந்து சென்றுள்ளார்.

அரசை பாதிக்கும் என்ற எண்ணத்தில் இந்த எதிர்ப்பு பேரணியை செய்தார்கள். ஆனால் கொழும்பு வாழ் அப்பாவி மக்களே பாதிக்கப்பட்டனர்.

அரசின் சில வேலைத்திட்டங்கள் மக்கள் மத்தியில் அதிருப்பத்தியை ஏற்படுத்தி இருந்தன. இதனால் பொது மக்கள் கூட்டு எதிரணியின் இந்த எதிர்ப்பு பேரணியில் இணைந்து எமக்கு எதிராக கோஷமிடுவார்கள் என அஞ்சினோம். ஆனால் தலைகீழாகவே நடந்துள்ளனது.

பொதுஜன பெரமுன வெட்கமடையும் அளவிற்கு இந்த ஆர்ப்பாட்டப் பேரணி பதிவாகியுள்ளது. மதுபானத்தை குடித்துவிட்டு வீதிகளில் ஆங்காங்கே விழுந்து கிடந்தார்கள். மதுவுக்காக வந்தவர்கள் மாத்திரமே இந்த பேரணியில் பங்கேற்றார்கள். ஆனால் பொது மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பேரணியை அடுத்து கொழும்பு நகரின் பரிதாப நிலை!

கொழும்பு, செப்.07

அரசுக்கு எதிராக கொழும்பில் நேற்று முன்தினம் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணிப் பேரணி காரணமாக கொழும்பு நகர் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. பல ஆயிரம் பேர் இந்தப் பேரணியில் கலந்துகொண்டு மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இந்தப் பேரணி நிறைவு பெற்றுள்ள நிலையில், பேரணியின பின்னர் நேற்றுக் காலை கொழும்பு நகரின் பரிதாப நிலை குறித்த புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

இந்த புகைப்படங்களில் சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளன. வீதிகளில் எங்கும் குப்பைகள் வீசப்பட்டுள்ளமையையும், மக்கள் வீதியில் உறங்குகின்றமையையும் இந்த புகைப்படங்கள் காட்டுகின்றன.

இந்த புகைப்படங்கள் தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் ஏட்டிக்குப் போட்டியாக ஹர்த்தாலுக்கு அழைப்பு!

மட்டக்களப்பு, செப்.07

மட்டக்களப்பு– பதுளை வீதி பெரியபுல்லுமலையில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் தயாரிப்புத் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ் உணர்வாளர்கள் என்ற பெயரில் ஏற்கெனவே இன்று வெள்ளிக்கிழமை ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள நிர்வாகப் பயங்கரவாதம், இனவாத வன்மக் கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு விடுப்பதாக நீதி கோரும் மக்கள் குரல், முஸ்லிம் சிவில் அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியன அறிவித்துள்ளன.

ஏட்டிக்குப் போட்டியான இந்த ஹர்த்தாலுக்குரிய தினமாக இந்த இரு தரப்புக்களும் வெள்ளிக்கிழமையைத் தேர்ந்தெடுத்துள்ளன.

வழமையாக மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் நகரப் பிரதேசங்கள் இன்று வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகைக்காக மூடப்படுவதோடு வெறிச்சோடியும் காணப்படும்.

அந்தத் தினத்தையே இருசாராரும் தமது ஹர்த்தால் வெற்றியடைந்தமைக்கான உத்தியாகப் பாவிக்க முனைந்துள்ளனர் போலத் தோன்றுவதாக நோக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.

சமூகங்களுக்கிடையிலான வெறுப்புணர்வுகளைத் தூண்டிவிடும் வகையில் இந்த ஏட்டிக்குப் போட்டியான ஹர்த்தால் அழைப்பு அமைந்து விடுமோ என தாங்கள் அஞ்சுகிறோம் என சமூக நல நோக்காளர்கள் தெரிவிக்கின்றனர்.

72 ஆவது ஆண்டு நிறைவு:

# ஐ.தே.கவின் சரித்திரத்தை விவரித்தார் அகிலவிராஜ்



கொழும்பு, செப்.07

ஐக்கிய தேசிய கட்சியின் 72 ஆவது ஆண்டு நிறைவு நேற்று கொண்டாடப்பட்டது.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளர் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆண்டு நிறைவு கொண்டாட்டங்கள் பற்றி விவரித்தார்.

சோல்பரி அரசியல் யாப்பின் கீழ்நடத்தப்பட்ட முதலாவது பொதுத் தேர்தலில் போட்டியிடும் நோக்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

1946 ஆம் ஆண்டு செப்டெம்பர் ஆறாம் திகதி கொழும்பு கில்பிரட் சுற்றுவட்டத்திலுள்ள பாம்போரட் மாளிகையில் அதன் முதற்கூட்டம் நடைபெற்றது. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு தேசபிதா டீ.எஸ். சேனா நாயக்கவின் பெயரை அமரர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயக்க முன்மொழிந்தார்.

இதன்போது கட்சியின் யாப்பை உருவாக்கும் பொறுப்பு அமரர் பண்டாரநாயக்க, சேர் பிரான்சிஸ் மொலமுரே ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மூத்த அரசியல்வாதி எஸ்.நடேசன் ஐக்கிய தேசியக் கட்சி என்ற பெயரை முன்மொழிந்தார். சேர் ஜோன் கொத்தலாவல, எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க, ஜோர்ஜ் ஈ சில்வா, ரி.வி.ஜாயா, ஏ.மகாதேவா ஆகியோர் உபதலைவராக தெரிவு செய்யப்பட்டார்கள்.

ஐக்கிய தேசிய கட்சியின் முதலாவது பொதுச் செயலாளராக அமரசூரிய நியமிக்கப்பட்டார். ஏ.ஆர்.ஏ. ராய் ஜே.ஆர்.ஜயவர்த் தன ஆகியோர் இணை பொருளாளர்களாக நியமிக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரு யானைகளின் சடலங்கள் மீட்பு



பொலன்னறுவை பெரியாற்றில் மூழ்கி உயிரிழந்த மேலும் இரண்டு யானைகளின் சடலம் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 2ஆம் திகதி பெரியாற்றில் மூழ்கி உயிரிழந்த நிலையில் 7 யானைகளின் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் இரண்டு யானைகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொள்கலன் ஒன்றிலிருந்து ஒன்றரைக் கோடி போதை மாத்திரைகள் மீட்பு

கொழும்பு துறைமுகத்தில், கொள்கலன் ஒன்றிலிருந்து ஒரு கோடி 50 லட்சம் அதிகமான போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் ட்ரமடோல் எனும் போதை மாத்திரைகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மண்வெட்டியால் தாக்கி மகனைக் கொன்ற தந்தை தலைமறைவு!

கொழும்பு, செப்.07

கிரிபாவை சந்தகலயாயபஹ பிரதேசத்தில் தந்தையொருவர், தனது மகனை மண்வெட்டியால் தாக்கி, கொலை செய்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு, குடிபோதையில் வீட்டிற்கு வந்த மகனுடன் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், அருகிலிருந்த மண்வெட்டியால் மகனை பலமாகத் தாக்கிவிட்டு தந்தை தலைமறைவாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சதொச ஊடாக நியாயமான விலைக்கு உருளைக் கிழங்கு கொள்வனவு!

விவசாயிகளின் உள்நாட்டு உருளைக் கிழங்கு அறுவடையை ச.தொ.ச. ஊடாக நியாயமான விலைக்கு கொள்வனவு செய்வதற்கு வாழ்க்கைச் செலவுக்குழு தீர்மானித்துள்ளது என கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் லங்கா ச.தொ.ச. பெறுகை உத்தியோகத்தர்கள் விவசாயிகளிடம் 1கிலோ கிழங்கு 90 ரூபா வீதமும், விவசாயிகளினால் லங்கா சதொசவிற்கு கொண்டு வந்து கொடுக்கப்படும் 1 கிலோ கிழங்கு 100 ரூபாவுக்கு பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று இவ்வாறு பெறப்படும் கிழங்கு ஒரு கிலோ லங்கா சதொசவினால் 115 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது என்றும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

மேற்கூறப்பட்ட விலைக்கு விவசாயிகளிடம் கிழங்குகளை பெற்றுக்கொள்ளுமாறு ஏனைய தனியார் பிரிவின் சுப்பர் மார்க்கட் விற்பனை நிலையங்களிடமும் வாழ்க்கைச் செலவுக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

எமது உள்நாட்டு கிழங்கு விவசாயிகளிடம் இடைப்பட்ட தரகர்களின் சுரண்டல்களை தடுத்து, உரிய விவசாயிகளிடமே கிழங்கை உரிய விலைக்கு பெற்றுக் கொள்கின்றமை ஊடாக சிறந்த விலையைப் பெற்றுக்கொடுப்பதே லங்கா சதொசவின் நோக்கம்.

அதே போன்று உள்நாட்டு கிழங்கு விவசாயிகளை ஊக்குவித்து அவர்களுக்கு சந்தையில் போட்டிகரமான இலாபத்தை பெற்றுக்கொடுப்பதற்கு பாவனையாளர்களுக்கு கிழங்கு விற்பனை செய்வதையும் எதிர்பார்ப்பாக கொண்டுள்ளது என்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத்பதியுதீன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

# ஜப்பானில் புயல் தாக்குதலில் சிக்கி 9 பேர் சாவு: 3 ஆயிரம் பேர் விமான நிலையத்தில் தவிப்பு



25 லட்சம் வரையான மக்கள் வெளியேறி முகாம்களில் தஞ்சம்

டோக்கியோ, செப்.07

ஜப்பான் நாட்டில் ஏற்பட்ட புயல் தாக்குதலில் இதுவரை 9 பேர் பலியாகி உள்ளனர். சர்வதேச விமான நிலையத்தில் வெள்ளம் சூழ்ந்ததால் 3 ஆயிரம் பயணிகள் வெளியேற முடியாமல் சிக்கித் தவிக்கின்றனர் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜப்பானில் மேற்கு கடற்கரை பகுதியில் 'ஜெபி' என பெயரிடப்பட்டுள்ள புயல் கடுமையாக தாக்கியது. இதனால் மணிக்கு 216 கி.மீ வேகத்தில் சூறாவளியுடன் கூடிய காற்று வீசியது. பலத்த மழையும் கொட்டியது.

இதன்காரணமாக மத்திய இஷிகவா, ஒசாகா, நகோயா உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. பலத்த காற்று காரணமாக மரங்கள், மின்கம்பங்கள் சாய்ந்தன.

மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருளில் தவித்தனர். காற்று பலமாக வீசியதால் வீதிகளில் சென்று கொண்டிருந்த மற்றும் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் தலைகீழாக புரட்டி போடப் பட்டு கவிழ்ந்தன.

ஒசாகா வளைகுடாவில் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த ஒரு லொறி தூக்கி வீசப்பட்டது. கயோடோ ரயில் நிலையத்தில் மேற்கூரை சரிந்தது.

ஒசாகாவில் கான்சாய் என்ற தீவு செயற்கையாக உருவாக்கப் பட்டது. அங்குள்ள சர்வதேச விமான நிலையத்தில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. ஓடுதளம் செயல் படாததால் அந்த விமானநிலையம் மூடப்பட்டது. இதன் வழியாக தினமும் 400 விமானங்கள் இயக்கப்படுகின்றன. விமான நிலையம் மூடப்பட்டதால் பயணிகள் கடும் சிரமத்துக்குள்ளாகினர்.

விமான நிலையத்தில் இருந்து வெளியேறும் வழியில் உள்ள பாலம் உடைந்துவிட்டது. இதனால் அங்கிருந்து 3 ஆயிரம் பயணிகள் வெளியேற முடியாமல் தவிக்கின்றனர். இதேபோன்று ஜப்பானில் உள்ள பல விமான நிலையங்களும் பாதிக் கப்பட்டு விமான போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது.

புல்லட் ரயில் சேவையும், பஸ் போக்குவரத்தும் நிறுத்தப் பட்டுள்ளன. கடலில் ராட்சத அலைகள் எழும்புவதால் படகு மற்றும் கப்பல் போக்குவரத்தும் நிறுத் தப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கு அதிகரித்துள்ளதால் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே மேலும் பலர் குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். நிலைமையை சமாளிக்கும் பணியில் பொலிஸார் ராணுவம் மற்றும் தீயணைப்பு படையினர் அடங்கிய மீட்பு குழு ஈடுபட்டுள்ளது.

பிரதமர் ஷின்சோ அபே அவசர கூட்டம் கூட்டி விரைவான மீட்பு நடவடிக்கை குறித்து ஆலோசித்தார். பொதுமக்களின் உயிரை காப்பாற்றும் நடவடிக்கையில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபடும் படி அறிவுறுத்தினார்.

இதற்கிடையே புயல் மழைக்கு இதுவரை 9 பேர் பலியாகி உள்ளனர். 200 பேர் காயம் அடைந்துள்ளனர். ஜப்பானில் 25 ஆண்டுகளுக்குப் பின் இத்தகைய கடும் புயல் தாக்கியுள்ளது என வானிலை ஆய்வு மைய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

(க)

# எத்தியோப்பியாவில் கனமழை; நிலச்சரிவில் சிக்கி 12 பேர் பலி!



அடிஸ் அபாபா, செப்.07

எத்தியோப்பியாவின் தெற்கு பகுதியில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

எத்தியோப்பியாவின் தெற்கு பகுதியில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக தாழ்வான பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளது.

இந்நிலையில் டாவ்ரோ பிராந்தியத்தில் செவ்வாய்க்கிழமை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் மூன்று வீடுகள் இடிந்து விழுந்தன. இடிபாடுகளில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 4 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மாவட்ட பொலிஸ் ஆணையாளர் கூறுகையில்–

நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களில் 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மற்ற இருவரின் உடல்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. பலத்த காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

எத்தியோப்பியா தலைநகரில் கடந்த ஆண்டு மழைக்காலத்தில் குப்பைமேடு சரிந்ததில் 115 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காபூல் மல்யுத்த பயிற்சி மையத்தில் தற்கொலைப்படை தாக்கு; 4 பேர் பலி!

## சம்பவத்தில் 18 பேர் படுகாயம்

காபூல், செப்.07

ஆப்கானிஸ்தானின் காபூலில் மல்யுத்தம் பயிற்சி மையத்தில் நடைபெற்ற தற்கொலைப்படை தாக்குதலில் 4 பேர் பலியாகியுள் ளனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டு தலைநகர் காபூலில் மல்யுத்தப் பயிற்சி மையம் அமைந்துள்ளது. இந்த மையத்தில் சிலர் நேற்று பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு தற்கொலைப் படை பயங்கரவாதிகள் நுழைந்து திடீரென தாங்கள் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தனர்.

இந்தத் தாக்குதலில் 4 பேர் உடல் சிதறி பரிதாபமாக பலியாகினர். மேலும், 18 பேர் படுகாயம் அடைந்தனர்.



தகவலறிந்து அங்கு சென்ற மீட்பு படையினர் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர். இதில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# இணையவழி நையாண்டிக்கு 5 ஆண்டுகள் சிறை வாசம்!

## சவூதி அரசு அதிரடி



ரியாத், செப்.07

பொது வாழ்க்கைமுறை, மதம்சார்ந்த கோட்பாடுகள் பற்றி சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் நையாண்டி விமர்சனங்களை தண்டனைக்குரிய குற்றமாக சவூதி அரசு அறிவித்துள்ளது.

சவூதி அரேபியா நாட்டின் புதிய மன்னராக முஹம்மது பின் சல்மான் பொறுப்பேற்ற பின்னர் பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூகவலைத்தளங்களில் அரசின் செயல்பாட்டை விமர்சிப்பவர்கள் கடும் நடவடிக்கைக்கும் தண்டனைக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இதற்கு மனித உரிமைகள் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கடும் அதிருப்தியும் எதிர்ப்பும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், பொதுவாழ்க்கைமுறை, மதம்சார்ந்த கோட்பாடுகள் பற்றி இணையதளங்கள் வழியாக கேலி, கிண்டல் மற்றும் விமர்சனங்கள் என்னும் போர்வையில் நையாண்டித்தனமான தகவல்களை பரப்பும் செயலை தண்டனைக்குரிய குற்றமாக்க சவூதி அரசு தீர்மானித்துள்ளது.

அப்படி செய்பவர்களுக்கு அதிகபட்சமாக 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 30 லட்சம் ரியால்கள் (இந்திய மதிப்புக்கு சுமார் 56 லட்சம் ரூபா) அபராதமாக விதிக்கப்படும் என அந்நாட்டு அரசின் தலைமை வழக்கறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

# பாக். அவாமி தேசிய கட்சி பிரமுகர் சுட்டுக் கொலை!



இஸ்லாமாபாத், செப்.07

பாகிஸ்தானின் பொவர் மாகாணத்தில் அவாமி தேசிய கட்சியை சேர்ந்த பிரமுகர் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள அவாமி தேசிய கட்சியைச் சேர்ந்தவர் முகம்மது இப்ரார் கலீல். இவர் நேற்று பொவர் மாகாணத்தில் டெக்கால் பகுதியில் தனது உறவினர்களுடன் காரில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் அங்கு வந்த மர்ம நபர்கள் சிலர் கலீலை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். இதில் அவர் படுகாயம் அடைந்தார்.

காயமடைந்த அவரையும், உறவினர் அர்த்தையும் மருத்துவமனையில் சேர்க்க கொண்டு சென்றனர். ஆனால் கொண்டு செல்லும் வழியிலேயே அவர்கள் இறந்து விட்டனர்.

தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பொவரில் பட்டப்பகலில் அவாமி தேசிய கட்சி பிரமுகர் சுட்டுக் கொல்லப்பட்டமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஜூலையில் நடைபெற்ற தற்கொலைப்படை தாக்குதலில் அவாமி தேசிய கட்சி பிரமுகர் ஹரூண் பிலோர் உட்பட12 பேர் பலியாகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்கள் உட்பட யாராக இருந்தாலும்

# ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானால் உரிய விசாரணை நடத்த வேண்டும்!

## தமிழிசை சவுந்தரராஜன் தெரிவிப்பு



அமைச்சர்கள் உட்பட யாராக இருந்தாலும் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானால் உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று தமிழிசை சவுந்தரராஜன் பேட்டி அளித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழக பா.ஜ.க தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் மேலும் தெரிவித்தவை வருமாறு–

பா.ஜ.கவின் மக்கள் நல திட்டங்களை தமிழகத்தில், மக்கள் விரோத திட்டங்களாக பரப்பி வருகிறார்கள். நீட் தேர்வை மக்களுக்கும், தமிழகத்திற்கும் வேண்டாத திட்டங்களாக கூறி வருகிறார்கள். அனைத்து மாநிலங்களிலும் நீட் தேர்வு அமுல்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் முதன் முறையாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாடசாலைகளில் உள்ள 40 மாணவிகள் மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர்.

எனவே, நீட் தேர்வு பயிற்சியை எந்த குளறுபடிகளும் இல்லாமல் மக்களுக்கு கொடுக்க வேண்டும். நீட் தேர்வில் மாணவர்கள் பாதிப்படையாத வகையில் அதற்கென தனி ஆசிரியர்களை நியமித்து பயிற்சி அளிக்க வேண்டும் என தமிழக கல்வித்துறை அமைச்சரிடம் கேட்டுக் கொண்டுள்ளேன். மேலும் பல கல்லூரி நிறுவனங்களில் ஊழல் நடைபெற்றுள்ளது. எந்தெந்த கல்வி நிறுவனங்களில் ஊழல் நடைபெற்றுள்ளதோ அங்கெல்லாம் ஊழல் களையப்பட உயர்கல்வி துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வழிபாட்டு தலங்களிலும், வழிகாட்டு தலங்களிலும் தமிழகத்தில் ஊழல் மேலோங்கி இருக்கிறது. எனவே இதனை சரி செய்ய வேண்டும் என்று முதல்வருக்கு தனிப்பட்ட கோரிக்கையாக வைக்கிறேன். காவல் துறையில் பணியாற்றும் பெண் அதிகாரி மீதான பாலியல் தொல்லை கொடுத்த அதிகாரி மீது சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிறது.

5 முறை ஆட்சி செய்த தி.மு.க.வினர் கடைக்கோடி தமிழனுக்கும் டாஸ்மாக் மது போவதை உறுதி செய்தார்கள். கடை மடை கால்வாய்க்கு தண்ணீர் போவதை தி.மு.க.வினர் உறுதி செய்யவில்லை. நீர்நிலை கட்டமைப்பை பொறுத்த வரை அ.தி.மு.கவை மட்டும் குற்றம் சொல்வது சரியல்ல. 5 முறை ஆட்சி செய்த தி.மு.க.வும் பொறுப்பு. நீர் மேலாண்மை தெரிந்த வெளிநாட்டு நிபுணர்களை வரவழைத்தாவது முக்கொம்பை சரி செய்து வெளியேறும் நீரை சேமிக்க வேண்டும். எந்த தலைவராக இருந்தாலும், அமைச்சராக இருந்தாலும் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானால் அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும். குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பேரணியில் பங்கேற்ற அனைவரையும் கட்சியில் இருந்து நீக்குவார்களா?



கேள்வி எழுப்புகிறார் அழகிரி

சென்னையில் நேற்று முன்தினம் தான் நடத்திய அமைதிப் பேரணியில் பங்கேற்றவர்களை எல் லாம் கட்சியில் இருந்து நீக்குவார்களா? என மு.க.அழகிரி கேள்வி எழுப்பியுள்ளார்.

தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட மு.க. அழகிரி, கருணாநிதியின் மறைவுக்குப் பிறகு மீண்டும் கட்சியில் சேரும் முயற்சியில் ஈடுபட்டார். கட்சி மேலிடம் அவரைக் கண்டுகொள்ளாத நிலையில், தனது பலத்தை நிரூபிக்கும் வகையில் நேற்று முன்தினம் சென்னையில் கருணாநிதி நினைவிடம் நோக்கி அமைதிப் பேரணி நடத்தினார்.

திருவல்லிக்கேணி பொலிஸ் நிலையம் அருகே வாலாஜா சாலையில் இருந்து கடற்கரை சாலை வரை பேரணி நடைபெற்றது. பேரணியின் நிறைவில் கருணாநிதி நினைவிடத்தில் மு.க.அழகிரி மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் மு.க. அழகிரி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது தனக்கு ஆதரவு தெரிவித்த அனைவருக்கும், பேரணிக்கு ஒத்துழைப்பு கொடுத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

தனது பேரணியில் சுமார் ஒன்றரை லட்சம் தொண்டர்கள் பங்குபற்றினர் எனக் கூறிய அவர், இந்த பேரணியில் பங்கேற்றதற்காக அனைவரையும் நீக்க முடியுமா? என்று கேள்வி எழுப்பினார்.

இந்த பேரணிக்கான காரணம் குறித்து கேட்டபோது, மறைந்த தலைவர் கருணாநிதிக்கு அஞ்சலி செலுத்த மட்டுமே இந்தப் பேரணி நடத்தப்பட்ட து. வேறு கார ணங்கள் எதுவும் இல்லை என்றும் அழகிரி கூறியுள் ளார்.

# தமிழர்களின் அடங்கா சினத்தை பா.ஜ.க. சந்திக்க வேண்டியிருக்கும்



ஸ்டாலின் எச்சரிக்கை

மக்கள் விரோத திட்டங்களைச் செயல்படுத்துவதில் தீவிரம் காட்டி வரும் மத்திய பா.ஜ.க அரசு, தமிழக மக்களின் பெருந்திரள் போராட்டத்தையும், அடங்கா சினத்தையும் சந்திக்க வேண்டியதிருக்கும் என்று மு.க.ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–

காவிரி டெல்டா பகுதிகளில் மூன்று இடங்களில் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு, இரண்டு இடங்கள் வேதாந்தா நிறுவனத்திற்கும், ஓர் இடம் ஓ.என்.ஜி.சி நிறுவனத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளன என வெளிவந்துள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

ஏற்கனவே, புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசலில் ஹைட்ரோ கார்பன் எடுக்கும் திட்டத்திற்கு, மக்கள் ஏகோபித்த எதிர்ப்பு தெரிவித்த நிலையில், தமிழக அரசின் அனுமதியின்றி ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று கூறி ஏமாற்றி வந்த மத்திய பா.ஜ.க. அரசு, இப்போது திடீரென்று மூன்று இடங்களில் ஹைட்ரோ கார்பன் எடுக்க அனுமதி வழங்கியிருப்பது, தமிழக வேளாண்மை முன்னேற்றம் பற்றியோ, தமிழக விவசாயிகளின் பாதுகாப்பு பற்றியோ மத்திய அரசு துளியும் கவலைப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டின் துயரம் மறைவதற்குள், ஸ்டெர்லைட் ஆலையை நடத்தி சுற்றுப்புறச் சூழலைக் கெடுத்து வரும் அதே வேதாந்தா நிறுவனத்திற்கு, மீண்டும் ஹைட்ரோகார்பன் எடுக்க இடங்களை மத்திய அரசு ஒதுக்கியிருப்பது, ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தை அடக்குவதில் மத்திய பா.ஜ.க. அரசும் தமிழகத்தில் உள்ள அ.தி.மு.க அரசுக்கு உறுதுணையாக இருந்து அரச பயங்கரவாதத்தை அப்பாவி மக்கள் மீது இரண்டு அரசுகளும் இணைந்து கட்டவிழ்த்து விட்டது உண்மையாகியிருக்கிறது.

எனவே, வெகுமக்கள் விரோத திட்டங்களைச் செயல்படுத்துவதில் தீவிரம் காட்டிவரும் மத்திய பா.ஜ.க அரசு, தமிழக மக்களின் பெருந்திரள் போராட்டத்தையும் அடங்கா சினத்தையும் சந்திக்க வேண்டிய கட்டாயமான நிலை உருவாகும் என்று மிகுந்த அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மோடி அரசை பற்றி கேள்வி எழுப்ப ராகுலுக்கு எந்த உரிமையும் கிடையாது

## பா.ஜ.க. தேசிய தலைவர் அமித்ஷா

பிரதமர் மோடியின் ஆட்சியை பற்றி கேள்வி எழுப்புவதற்கு ராகுல் காந்திக்கு எந்த உரிமையும் கிடையாது என பா.ஜ.க. தேசிய தலைவர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. தேசிய தலைவர் அமித்ஷா சட்டசபை தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். அதன் ஒரு பகுதியாக, சத்தீஸ்கர் மாநிலத்தில் தற்போது பிரசாரம் செய்து வருகிறார்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் குருபத் கிராமத்தில் உள்ள பிரயாககிரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமித்ஷா கலந்து கொண்டு பேசி னார்.

அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு–

கடந்த 60 ஆண்டு காலமாக காங்கிரஸார் இந்தியாவை ஆட்சி செய்து வந்துள்ளனர். அப்பொழுது கிராமங்களுக்கு ஏன் மின்சார வசதி கிடைக்கவில்லை? விவசாயிகளுக்கு பயனளிக்க கூடிய கொள்முதல் விலை ஏன் கிடைக்கவில்லை?

இந்தியாவை ஆட்சி செய்த 60 ஆண்டுகளின் கணக்குகளை காட்டவேண்டும் என மக்கள் உங்களிடம் எதிர்பார்க்கின்றனர். நீங்கள் பிரதமர் மோடியின் 4 ஆண்டு கால ஆட்சி குறித்து கணக்கு கேட்கிறீர்கள். உங்களுக்கு மோடி ஆட்சி பற்றி கேள்வி கேட்க எந்த உரிமையும் கிடையாது எனத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு இறுதியில், சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மிசோரம் உள்ளிட்ட மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# கல்லாதவர்களே இல்லை எனும் நிலையை அ.தி.மு.க. அரசு உருவாக்கி வருகிறது!

## தமிழக முதலமைச்சர் பழனிசாமி

சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பேசிய முதலமைச்சர் பழனிசாமி, கல்லாதவர்களே இல்லை எனும் நிலையை அ.தி.மு.க. அரசு உருவாக்கி வருகிறது என தெரிவித்துள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில் கல்வித்துறை சார்பில் முப்பெரும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில் முதலமைச்சர் பழனிசாமி, துணை முதலமைச்சர் பன்னீர்செல்வம், அமைச்சர் செங்கோட்டையன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அப்போது பேசிய முதலமைச்சர்



பழனிசாமி மேலும் தெரிவித்தவை வருமாறு–

கருவறை, ஆசிரியர் உள்ள வகுப்பறை இரண்டும் முக்கியமானது. மாணவர்களுக்கு தற்காப்பு பயிற்சி அளிக்க நிதி ஒதுக்கப்படும். ஆசிரியர்களுக்கு தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

புதிய பாடத்திட்டங்களை சிறப்பாக கற்பிக்கும் வகையில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆசிரியர்கள் பாடம் நடத்துபவராக மட்டும் இருக்கக் கூடாது. அதையும் தாண்டி மாணவர்களுக்காக உழைக்க வேண்டும். பிளாஸ்டிக் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். கல்லாதவர்களே இல்லை என்னும் நிலையை அ.தி.மு.க தலைமையிலான அரசு உருவாக்கி வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஒரு பால் உறவைத் தடுக்கும் சட்டம் இந்தியாவில் ரத்து!

## உச்ச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

சட்டபூர்வ வயதை அடைந்த – ஒரே பாலினத்தைச் சேர்ந்த– இருவர் பாலுறவு கொள்கின்றமையைக் குற்றமாக்கும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 377 ஐ ரத்து செய்து இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இயற்கையின் விதிகளுக்கு மாறாக ஓர் ஆண், பெண் அல்லது விலங்குடன் பாலுறவு கொள்பவர்கள் ஆயுள் சிறை தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையிலான சிறை தண்டனை ஆகிய தண்டனைக்கு உள்ளாவார்கள். அவர்கள் அபராதம் செலுத்தவும் பொறுப்பானவர் ஆவார்கள், என்று பிரிவு 377 கூறுகிறது.

விக்டோரியன் காலத்தின் இந்தச் சட்டப்பிரிவு கடந்த 150 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் நடைமுறையில் இருந்தது. அதுவே இப்போது உச்ச நீதிமன்றத்தினால் ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். அத்துடன், பலர் கப்பம் பெறுவோரின் தொந்தரவுகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு காணாமற்போனோர் அலுவலகத்தின் இடைக்கால அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

காணாமல்ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிவதற்காகஅமைக்கப்பட்ட காணாமற்போனோர் அலுவலகத்தின் இடைக்கால அறிக்கை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில்வைத்து ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கட்டது.

காணாமற்போனோர் அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸினால் இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

காணாமற்போனோரினதும் காணாமல்ஆக்கப்பட்டோரினதும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பல்வேறு வன்முறைகள் மற்றும் தொந்தரவுகள் தொடர்பாக காணாமற்போனோர் அலுவலகம் அறிந்துள்ளது.

கடந்தகால ஆணைக்குழுக்கள் மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனைச் செயலணிக்குக் கிடைத்துள்ள பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கமைய பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெண் உறுப்பினர்கள் பாலியல் தொந்தரவுகளுக்கும், பல்வேறு இலஞ்சங்களுக்கும் ஆளானார்கள் என்று அறிக்கையிடப்பட்டிருந்தது.

காணாமல்ஆக்கப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்கள், காணாமற்போனோர் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு அல்லது சில நிர்வாக நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு, பாலியல் இலஞ்சம் கோரப்பட்ட சந்தர்ப்பங்களும் அறிக்கையிடப்பட்டிருந்தன.

2018 ஜூலை 6ஆம் திகதி அடையாளம் காணப்படாத ஒரு குழுவினால் திருமதி அமித்தா பிரியந்தி, அளுத்கமபிரதேசத்தில் தாக்குதலுக்கு ஆளானார். அதே சமயம் 2018 ஜூலை 13ஆம் திகதி வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் திருமதி ஸ்ரீசோபனா யோகலிங்கம் தாக்கப்பட்டார்.

இந்த விடயங்கள் தொடர்பாக எமது கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறாகத் தொடர்ந்தும் இடம்பெறும் அச்சுறுத்தல்கள் பற்றிய முறைப்பாடுகள் பாதிக்கப்பட்டோர்கள், பிரதிவாதிகள், உறவினர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சாட்சிகள் ஆகியோர் எதிர்நோக்கிய பிரச்சினைகளாகும்.

அரசின்நீதிபரிபாலனச்செயல்முறை தொடர்பான நம்பிக்கை வீழ்ச்சியடைவதற்கும், இவை காரணமாக அமைந்துள்ளன என நாம் நம்புகிறோம் – என்றுள்ளது. (ஐ)

## ராணுவத்திடமிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் சில காணிகளும் நேற்றுப் படையினரால் விடுவிக்கப்பட்டன.

விடுவிக்கப்பட்ட மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் பாடசாலைக்கான பத்திரங்களை வழங்கினார். அத்துடன் பொது மக்களின் காணி விடுவிப்புப் பத்திரங்கள் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

போர் காரணமாக வலிகாமம் வடக்கு உட்பட குடாநாட்டின் பல இடங்களிலும் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் படையினரால் கையகப்படுத்தப்பட்டன. ஆயினும் இந்தக் காணிகள் தற்போது பொது மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டுவருவதன் தொடர்ச்சியாகவே நேற்றுப் பாடசாலையும், மக்களின் சில காணிகளும் விடுவிக்கப்பட்டன.

நேற்று மயிலிட்டியில் உள்ள கலைமகள் வித்தியாலயம், ஆனைக்கோட்டை கூழாவடிப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் அகற்றப்பட்டு அதனுள் காணப்படும் எட்டு வீடுகள் என்பன மக்களிடம் வழங்கப்பட்டன. மேலும் குரும்பசிட்டிப் பகுதியில் காணப்படும் பலநோக்கூட்டுறவுச் சங்கக் கட்டடம், கிராமச் சங்கக் கட்டடம் என்பனவும் மீள மக்களிடம் வழங்கப்பட்டன.

அண்மையில் மயிலிட்டிப் பிரதேசத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய விரைவில் இந்தப் பாடசாலை விடுவிக்கப்படுமென அவர் உறுதிமொழி வழங்கியிருந்தார். ஜனாதிபதியின் உறுதிமொழிக்கமையவே பாடசாலை விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அந்தப் பாடசாலையின் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட பாடசாலைக் காணிகள் விடுவிக்கப்படவில்லை என்று பாடசாலைச் சமூகத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் கலைமகள் வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், இராணுவ அதிகாரிகள், அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-7)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு கர்ப்பிணித் தாய் ஒருவர் அனுமதிக்கப்பட்டார். அவர் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையைப் பிரசவித்துள்ளார். எனினும் அந்தக் குழந்தை உயிரிழந்துவிட்டது.

இந்நிலையில் நேற்றுக் காலை கர்ப்பிணிப் பெண்ணைப் பார்வையிட வந்த கணவர் மற்றும் உறவினர் ஒருவர், பிரசவ விடுதியில் கடமையில் இருந்த வைத்திய அதிகாரியைத் தாக்கியமையோடு பாதுகாப்பு உத்தியோகஸ்தரையும் தாக்கியுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து அந்த இருவரையும் உடனடியாக மன்னார் பொலிஸார் கைது செய்தனர்.

வைத்திய அதிகாரி மற்றும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஆகியோர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து நேற்று வைத்தியசாலை வைத்தியர்கள் ஒரு நாள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

எனினும் வைத்தியசாலைக்கு வரும் மக்களின் நலன் கருதி அவசர சிகிச்சைகள் இடம்பெற்றன.

நேற்று மன்னார் வைத்திய சாலைக்குச்சென்ற வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் மற்றும் வைத்தியர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ராஜீவ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும், முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய ஏழு பேரையும் விடுவிக்க தமிழக அரசு முடிவு செய்து இந்திய மத்திய அரசின் கருத்தைக் கோரியிருந்தது.

எனினும், தமிழக அரசின் இந்த முடிவுக்கு எதிராக, இந்திய மத்திய அரசு உச்சநீதிமன்றில், மனுத் தாக்கல் செய்திருந்தது. அந்த வழக்கில், கைதிகளை விடுதலை செய்யும் அதிகாரம் மத்திய அரசுக்கே இருப்பதாக உச்சநீதிமன்றம் கூறியிருந்தது.

எனினும், இதற்கு எதிராக தமிழக அரசு சார்பிலும், இந்த வழக்குடன் தொடர்புடைய கைதிகள் சார்பிலும் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையின் பின்னர் நேற்று உச்சநீதிமன்ற நீதிபதி ரேஞ்சன் கோஹோய் தலைமையிலான அமர்வு இந்த வழக்கின் தீர்ப்பை அளித்து வழக்கை முடித்து வைத்துள்ளது.

இதன்படி, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட 7 கைதிகளின் விடுதலை விடயத்தில் தமிழக அரசே முடிவெடுக்கலாம் என்றும், தமிழ்நாடு ஆளுநருக்கு தமது பரிந்துரையை அனுப்பி வைக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், ஏழு பேரையும் விடுவிக்கக் கோரி, 2016 இல் தமிழக அரசின் சார்பில் அளிக்கப்பட்ட மனு மீது ஆளுநர் முடிவெடுக்கலாம் என்றும் உச்சநீதிமன்ற அமர்வு தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

தமிழக அரசுக்கும், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைவிதிக்கப்பட்ட 7 கைதிகளுக்கும் சாதகமாக இந்தத் தீர்ப்பு அமைந்திருந்தாலும், ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் இந்திய மத்திய அரசின் முடிவுக்கு எதிராகத் தீர்மானம் எடுப்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ஐ)

## நள்ளிரவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சத்தியாக்கிரகம் நேற்று விடிகாலை வரை தொடரும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அறிவித்திருந்தபோதும், அது நள்ளிரவுக்கு முன்னரே முடிந்தது.

நேற்றுமுன்தினம் மாலை பேரணியில் பங்கேற்றவர்களின் மத்தியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த உரையாற்றியபோது–

இந்தப் பேரணிமிகவும்வெற்றியளித்துள்ளது. விடிகாலை வரை இந்தப் போராட்டம் தொடரும், பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்ட போதும், பெருந்தொகையானவர்கள் கொழும்பில் ஒன்று கூடினார்கள். தடைகள் ஏற்படுத்த ஏற்படுத்தக் கூட்டு எதிரணி பலமடையும், இதுபோன்ற போராட்டங்களைக் கூட்டு எதிரணி எதிர்காலத்திலும் நடத்தும் – என்று கூறியிருந்தார்.

எனினும், மஹிந்தவுடன் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை இரவு 7 மணியுடன் குறையத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் 3000 பேர் வரையிலேயே அங்கு அமர்ந்திருந்தனர்.

இந்த நிலையில் நள்ளிரவுக்கு முன்னரே – சுமார் 11.30 மணியுடன் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்த கூட்டு எதிரணியின் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதனால்விடியும்வரை நடத்தவிருந்த போராட்டம், நள்ளிரவுக்கு முன்னரே முடிந்தது. (ஐ)

## விடுவிக்கப்படாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள், தாம் அல்லுறும்போது இவர்களுக்கு விவசாயம் தேவை தானா என்றும் கேள்வி எழுப்பினர்.

நேற்று மயிலிட்டியில் கலைமகள் வித்தியாலயம் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பங்கேற்க அப்பகுதி மக்களும் சென்றிருந்தனர்.

இதன்போது மயிலிட்டிப் பாடசாலையின் காணி முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அந்தக் காணியில் படையினர் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ளதைமையை நேரில் அவதானிக்க முடிந்தது என்றும், இதனாலேயே அந்தக் காணி விடுவிக்கப்படவில்லைஎன்றும்அங்கு சென்ற பொதுமக்கள் கூறினர்.

இரவல் காணிகளில் நாங்கள் இடம்பெயர்ந்து வசித்து வருகிறோம். இப்படி இருக்க எங்கள் காணிகளில் இராணுவம் பயிர் செய்து வருமானம் ஈட்டுகின்றது. நாங்கள் வருமானம் எதுவும் இன்றித் திண்டாடுகின்றோம். இந்தக் காணிகளை எங்களிடம் ஒப்படைத்தால் எமது வாழ்க்கை மேம்படும் என்று அந்த மக்கள் வேதனையோடு கூறினர். (ஐ-7)

## மயிலிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை நேற்று மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டபோது புத்தர் சிலை அகற்றப்படவில்லை.

பாடசாலை வளாகத்தில் வைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்படாமை குறித்துப் பாடசாலைச் சமூகத்தினர் கடும் அதிருப்தி வெளியிட்டனர்.

மயிலிட்டிப் பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்வதற்கு முன்னர் பல கட்டடங்களைக் கொண்டதாக இருந்த இந்தப் பாடசாலையை நேற்று இராணுவம் விடுவித்தபோது ஒரு கட்டடம் மட்டுமே சேதங்களுடன் காணப்பட்டது.

அத்துடன் அங்கு அரச மரம் நாட்டப்பட்டு புத்தர் சிலை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. பாடசாலை நேற்று விடுவிக்கப்பட்டபோதும் புத்தர் சிலை அகற்றப்படவில்லை. இது குறித்து பாடசாலைச் சமூகத்தினர் கடும் விசனம் வெளியிட்டனர். (ஐ-7)

## தலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு வருகின்றன. நேற்று அங்கு இடம்பெற்ற அகழ்வுப் பணியின் போது தலையில் வெட்டுத் தழும்புடன் மண்டையோடு மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த வெட்டுத் தழும்பு பிரேத பரிசோதனையின்போது ஏற்பட்டதா? அல்லது கூறிய ஆயுதங்களால் தாக்கப்பட்டபோது ஏற்பட்டதா? அல்லது வேறுவிதமாக ஏற்பட்டதா என்பது தொடர்பான விடயங்கள் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

எனினும், ஒவ்வொரு நாள் அகழ்வுப் பணியின் போதும் புதிதாக மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்படுவதனால் அவற்றை அப்புறப்படுத்தும் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படுவதாக அகழ்வுப் பணியில் ஈடுபடும் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, இதுவரை 120 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன., 114 மனித எலும்புக்கூடுகள் அந்த வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டது. (ஐ)

## ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2,800 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டுள்ளதாக வலிவடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்த மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தை விடுவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் மயிலிட்டிக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் மயிலிட்டிக்லைமகள் பாடசாலையை விடுவிக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய அந்தப் பாடசாலையை இரண்டு வாரத்துக்குள் விடுவிப்பதாக அவர் உறுதியளித்திருந்தார். அதனடிப்படையில் இன்று (நேற்று) அந்தப் பாடசாலை விடுவிக்கப்பட்டிருக்கிறது.

2015 ஆம் ஆண்டு நாட்டில் ஆட்சி மாற்றமொன்று ஏற்படுவதற்கு முன்னர் வலிகாமம் வடக்கில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் 6300 ஏக்கர் நிலப்பரப்பு இருந்து. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னரான கடந்த

பக்கம் 03 »

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தடுத்துமூன்றுவீடுகளுக்குள் புகுந்த வாள் வெட்டுக் கும்பல், மூவர் மீது தாக்குதல் நடத்தியதுடன், வீடுகளிலுள்ள பொருள்களையும் சேதப்படுத்தித் தப்பிச் சென்றுள்ளது.

ஒரு வீட்டில் குடும்பப் பெண் மீதுதாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மற்றொரு வீட்டில் தந்தை மற்றும் மகன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியைச்சேர்ந்த வேலுப்பிள்ளை செல்வராசா (வயது 70), செல்வராசா சஜீபன் (வயது 25), பாலேந்திரன் சரோஜினிதேவி (வயது 61) ஆகிய மூவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவங்கள் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரும் இரகசியப் பொலிஸ் பிரிவும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-7)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரமான பேரணி என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே நாமல் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பேரணி நடத்துவதைத் தடுப்பதற்காக அரசு சதி நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதிலும் நாங்கள் நினைத்ததை விட அதிகமாகச் சாதித்துள்ளோம்.

அரசு பேரணி தோல்வி எனத் தெரிவிக்கின்றது. வீதிகளில் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள் மூலம் தனக்கு எதிரான அதிருப்தி தீவிரமடைவதைப் பார்த்த பின்னரும் அரசு ஏன் அவ்வாறு தெரிவிக்கின்றது என விளங்கவில்லை.

நாங்கள் ஆளுங்கட்சியைத் தேர்தலுக்குச் செல்லுமாறு சவால் விடுக்கின்றோம். அதன் மூலம் அவர்களின் தலைவிதி தெரியவரும் – என்றார். (ஐ)

# ஆசியச் சம்பியனை வீழ்த்தியது இலங்கை வலைப்பந்து அணி



11 ஆவது ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது சுற்றில் இலங்கை அணி நடப்புச் சம்பியனான மலேஷியாவை வீழ்த்தி தனது அபாரமான வெற்றியைப் பதிவுசெய்துள்ளது. ஆசிய நாடுகளில் 12 அணிகள் பங்கேற்றுள்ள 11ஆவது ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடர் சிங்கப்பூரில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் சுற்றுப் போட்டிகள் முடிவடைந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இத் தொடரில் கலந்துகொண்டு விளையாடிவரும் இலங்கை அணி தனது முதல் போட்டியில் சைனீஸ் தாய்பே அணியை 137-5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்தி அபாரமான வெற்றியைப் பதிவு செய்தது.

இதனையடுத்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இந்தியாவை 101-29 என வீழ்த்தியது. இந்த 3 வெற்றிகளுடன் இலங்கை அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. இந்நிலையில் இரண்டாவது சுற்றின் முதல் போட்டியில் சிங்கப்பூர் அணியை 74-61 என்ற புள்ளிகள் அடிப்படையில் வீழ்த்திய இலங்கை அணி நேற்று முன் தினம் ஆசிய சம்பியன்ஷிப் தொடரின் நடப்பு சம்பியனான மலேஷியாவை எதிர் கொண்டது.

பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில் இரு அணிகளும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி எதிரணிக்கு கடும் சவாலாக விளங்கின. ஒவ்வொரு அணியும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள புள்ளிகள் பட்டியல் சரிசமமாகவே நகர்ந்தது.

இறுதியில் முந்திக்கொண்ட இலங்கை அணி 62-59 என்ற புள்ளிகள் அடிப்படையில் நடப்பு சம்பியனை வீழ்த்தி அரையிறுதி வாய்ப்பை உறுதிசெய்து கொண்டது. (ஐ)

# குத்துச் சண்டையில் பதக்கம் வென்ற வவுனியா மாணவிகள் கௌரவிப்பு



தேசிய ரீதியில் நடைபெற்ற வூசோ குத்துச்சண்டை போட்டியில் கலந்துகொண்டு பதக்கங்களை வென்ற வவுனியா கோவில்குளம் இந்துக்கல்லூரி மாணவிகள் இரண்டு பேரை கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் ரீ.பூலோகசிங்கம் தலைமையில் நேற்று முன் தினம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கொழும்பு மகறகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் தேசிய ரீதியில் நடைபெற்ற வூசோ குத்துச்சண்டைப் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிபலித்து கலந்துகொண்டு கே.டிலக்சினி தங்கப்பதக்கத்தையும், என்.றோசிமன்யு வெள்ளிப்பதக்கத்தையும் சுவீகரித்து வடமாகாணத்திற்கு பெருமைசேர்த்திருந்தனர்.

அதனைக் கௌரவிக்கும் முகமாக வவுனியா இந்துக்கல்லூரியின் பாண்ட் வாத்தியக் குழுவினரின் அணிவகுப்புடன் பதக்கங்களை வென்ற இரண்டு மாணவிகளும் அழைத்து வரப்பட்டுக் கல்லூரி அதிபரினால் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

வடமாகாண ரீதியில் மாணவிகளை பயிற்றுவித்து கல்லூரிக்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்த்த வடக்கு மாகாண வூசோ குத்துச்சண்டை பயிற்றுவிப்பாளர் எஸ். நந்தகுமாருக்கு கல்லூரி அதிபரினால் நினைவு பரிசில் ஒன்றும் வழங்கப்பட்டது.

# புதிய வீரர்களுடன் வலுப்பெறுகிறது பெங்களூர் அணி

இந்தியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் தொடரில் விளையாடும் பெங்களூர் அணிக்கு அஷிஷ் நெஹ்ரா பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரரான அஷிஷ் நெஹ்ரா, கடந்த ஐ.பி.எல். சீசனிலிருந்து பெங்களூர் அணிக்கு பந்துவீச்சு பயிற்சியாளராக இருந்து வந்தார். இந்நிலையில், அஷிஷ் நெஹ்ராவை பயிற்சியாளராக பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

தலைமைப் பயிற்சியாளர் ஹரி கிறிஸ்ரனுடன் இணைந்து நெஹ்ரா முழுநேரப் பயிற்சியாளராகச் செயலாற்றுவார் எனவும் பெங்களூரு அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் எதிர்வரும் சீசனில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி பலமிக்க அணியாக இருக்கும் என இரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.


## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-07, பாஷ்யூர், 2ம் குறுக்குத்தெரு, ஆதன இல38B என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் 'கிரகறி செபஸ்தியாம்பிள்ளை பெண் மரியகன்னி' என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை பாஷையூர், சென்செபஸ்தியன் வீதியைச் சேர்ந்த மருத்தீசு யேசுரத்தினம் பெண் அன்னம்மா பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 2014.06.26 ஆம் திகதியிட்டு 956 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியில் குறித்த ஆதனம் 1977 ஆம் ஆண்டு தமது பெற்றோரால் அவருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது என்றும் குறித்த நன்கொடை உறுதி யுத்தத்தின்போது ஏற்பட்ட இடப்பெயர்வில் தொலைந்துவிட்டது என்றும் உறுதியைப் பெறுவதற்கு பல பிரயத்தனங்கள் மேற்கொண்டும் உறுதியைபெற்றுக் கொள்ள முடியவில்லை என்று வெளிப்படுத்தி யுபிரன் பெண் ஜெறினுக்கு தமது சீவிய உரித்திற்கு அமைவாக நன்கொடையாக வழங்கியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய 2017.02.20 ஆம் திகதியிட்டு 1558 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் தற்போது கனடாவில் வசிக்கும் வில்சன் யுபிரனும் பெண் ஜெறினும் அற்றோனித்தத்துவக்காரரான வஸ்தியாம்பிள்ளை பெர்னான்டோ என்பவர் மூலம் பாசையூர் 2ம் X தெரு இல 4 ஐச் சேர்ந்த வினாசித்தம்பி இலங்கநாதனும் பெண் டியூக்குளினுக்கும் குறித்த ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, பாசையூர் இறை 'விளாங்குளம்புலமும் பனிக்கன் ஓடையும்' இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களின் வரைபட இலக்கம் 1791/2014.06.17 இல் துண்டு-1 எனக் காட்டப்பட்ட நில.பர.00 குளி 13.35 ஆகும்.

கிழக்கு:- மூன்றடி பொதுப்பாதை
வடக்கு:- அலோசியஸ் யூட்டின் ஆதனம்
மேற்கு:- 2ம் குறுக்குத் தெரு
தெற்கு:- செபஸ்தியாம்பிள்ளை மரியகன்னியின் ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை வினாசித்தம்பி இலங்கநாதனும் பெண் டியூக்குளினும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வினாசித்தம்பி இலங்கநாதன் பெண் டியூக்குளின் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**



## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 22, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி, ஆதன இல. 96/2 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த மார்க்கண்டு சண் முகதாசனும் பெண் செல்வதேவியும் குறித்த ஆதனம் தமது பிதாவழி முதுசமும் நீண்ட காலத்தடையற்ற ஆட்சியுமானது என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிஸ் செ.கணபதிப்பிள்ளை முகதாவில் 2006.03.12 ஆம் திகதி 1404 ஆம் இலக்கத்தில் நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனத்தை மார்க்கண்டு சண்முகதாசன் மகள் நிகிந்தாவுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் 2015.03.01ம் திகதி 3283 இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மார்க்கண்டு சண் முகதாசன் மகள் நிகிந்தா குறித்த ஆதனத்தை விளையாட்டரங்கு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாயைச் சேர்ந்த செல்லத்துரை செல்வரஞ்சனிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய உறுதி இல 25.09.2017 ஆம் திகதி 3845 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதி மூலம் செல்லத்துரை செல்வரஞ்சனும் பெண் பத்மினியும், மார்க்கண்டு சண்முகதாசனுக்கும் மனைவி செல்வதேவிக்கும் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

ஆதன இடாப்பு:- யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் மேற்கு இறை 'பிரப்பங்குளி' நில.பர.01 குளி 14.331 இது 2006.02.26ந் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.S.சந்திரசேகரம் தயாரித்த 1777 ஆம் இலக்கப் படத்தில் துண்டு - 1 எனச் சுட்டப்பட்டுள்ளது. இதன் எல்லை

வடக்கு:- அருமைத்துரை சுபாகரனின் ஆதனம்
கிழக்கு:- ஒழுங்கை
மேற்கு:- தான்தோன்றி வைரவர் கோயிலாதனம்
தெற்கு:- குகாபரன் தாரணியின் ஆதனம்

தற்போது இவ்வாதனத்தை மார்க்கண்டு சண்முகதாசனும் பெண் செல்வதேவியும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது மர்க்கண்டு சண்முகதாசனும் பெண் செல்வதேவியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

# ஆஸி தூதுவர் - ஆளுநர் பேச்சு



யாழ்ப்பாணம், செப்.07

யாழ்ப்பாணம் வந்த ஆஸ்தி ரேலியத் தூதுவர்பிரைஸ்ஹட்சிசன் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே யைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சுண்டுக்குளியில்அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

போரின் பின்னர் வடமாகாண மக்களின் தேவைகள் தொடர்பாகவும், அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் சம்பந்தமாகவும் தூதுவர் ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கை களை ஊக்குவிப்பதற்கான பணிகளைச் செய்வதற்கு ஆஸ்திரேலிய அரசு விருப்பம் கொண்டிருக்கின்றது எனவும், விசேடமாக தமது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நவீன தொழில்நுட்பத்துடனான மழைநீர் மூலமான விவசாய நடவடிக்கையை வட மாகாணத்தில் ஏற்படுத்துவதற்கு எண்ணியுள்ளது என்றும் ஆஸ்திரேலியத் தூதுவர் ஆளுநரிடம் கூறினார்.

அத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகளை வழங்குவதற்கு ஆஸ்திரேலிய அரசு ஆர்வம் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மனிதாபிமானக் கண்ணிவெடி அகற்றும் பணிகளை தமது அரசு வடக்கு மாகாணத்தில் திறம்படச் செயற்படுத்தி வருவது தொடர்பில் கருத்து தெரிவித்த தூதுவர், வடக்கில் ஐந்து மாவட்டங்கள் உள்ள போதும் மிகவும் பாதிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்களுக்கு அதிகளவான உதவிகள் கிடைப்பதற்கு வடக்கு மாகாணசபை நிதி ஒதுக்கீடு செய்ய ஆளுநர் பரிந்துரைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தாம் தயாராகவிருக்கிறார் என ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவனும் கலந்துகொண்டார். (ஐ-7)

# கொழும்பில் தீ விபத்து; பெண் வைத்தியர் சாவு!

கொழும்பு, செப் .07

கொழும்பு பெல்லன்வில பகுதியின் வீடொன்றில் ஏற்பட்ட தீ அனர்த்தத்தில் கர்ப்பிணித் தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் கணவரும், ஐந்து வயது மகனும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

38 வயதுடைய பெண் வைத்தியர் ஒருவரே இவ்வாறு தீ அனர்த்தத்தில் உயிரிழந்துள்ளார். அவரது கணவரும் வைத்தியர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திடீர் தீ அனர்த்தத்திற்கான காரணம் இதுவரை வெளியிடப் படாத நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

**தென்னிந்திய யாத்திரை**

**தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி ஊடான யாத்திரை**

ஆரம்பம் - 01.10.2018, நாள்கள் 12, யாத்திரீகர் 10

தங்குமிடங்கள்: திருச்சி உச்சிப் பிள்ளையார், சமயபுரம், ஸ்ரீரெங்கம், பஞ்சபூதத் தலங்கள், சிதம்பரம், திருவெண்ணாமலை, கானகஸ்திரி, திருவானை காவல், ஏகாம்பரேஸ்வரர், 9 நவக்கிரக ஆலயங்கள், திருநள்ளாறு சனி பகவான், ராகு பகவான், கேதுபகவான், சூரியபகவான், சந்திர பகவான், புதன் பகவான், செவ்வாய் பகவான், வியாழ பகவான், சுக்கிர பகவான், திருப்பதி, அலுமேலு மங்கா, 6 படை முருகன், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருப்பரம்குன்றம், திருத்தணி, பழமுதிர்ச்சோலை, இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி, பஞ்சவடி ஆஞ்சநேயர், மணக்குழ விநாயகர் உட்பட 45க்கு குறையாத ஆலங்களைத் தரிசிப்பதுடன் பாண்டிச்சேரி பீச், மரீனாபீச், அப்துல் கலாம் மணி மண்டபம், அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, கருணாநிதி ஆகியோரின் நினைவிடங்களையும் காணலாம். பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை; இரு வழி விமான ரிக்கற், மூன்று வேளை உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட், குளியலறை இணைந்த அறைகள், யாத்திரை முழுவதும் A/C வாகன வசதி, யாழ். - கொழும்பு - யாழ் வாகன வசதி செய்து தரப்படும். விவரங்கள் கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்/ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 7680 102, 077 736 2154




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.